Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolog phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 25 (13.08.2004) வெள்ளிக்கிழமை இதழ்:315

### சமாதான செயலகத்துக்கு வாகனங்கள்

## தெளிவற்ற நிலையிலே ஜே.வி.பி; ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்துக்கு தீர்வையின்றி வாகனங்களை வழங்கியமை தொடர்பாக ஜே.வி.பியிடம் தெளிவற்றநிலை காணப்படுவதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுக் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகனங்கள் தொடர்பாக அமைச்சரவையிலேயே முடிவு எடுக்கப்பட்டது. அந்த அமைச்சரவையில் ஜே.வி.பி சார்பாக நான்கு பேர் உள்ளனர்.

எனவே - அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டால், ஜே.வி.பி.சார்பான அமைச்சர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்தே இருக்க வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பாக

## 4 ஈழத் தமிழருக்கு ஆயுள் தண்டனை

### லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு

(லண்டன்)

கிரிக்கெட் மட்டையால் ஒருவரைத் தாக்கிக் கொலை செய்தமைக்காக நான்கு ஈழத் தமிழ் இளைஞர்களுக்கு இலண்டன் நீதிமன்றம் ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடந்த யூலை மாதம் 19 ஆம் திகதி சலவைத் தொழிலகத்தின் உரிமையாளரான 36 வயதுடைய பாலசிங்கம் என்பவரை கிரிக்கெட் மட்டையால் தாக்கிக் கொலை செய்தமை தொடர்பாகவே இவர்களுக்கு லண்டன் நீதிமன்றம் ஆயுட்தண்டனையை விதித்துள்ளது.

லண்டன் ஹலமோறகன் என்ற இடத்தில் சன்லைற் என்ற சலவைத் தொழிலகத்தை நடத்திவந்த பாலசிங்கம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தவே ஜனாதிபதியால் மாற்றுத்திட்டம் தயாரிப்பு!

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்துக்கு மாற்றாக அரசாங்கமும் இடைக்கால நிர்வாக யோசனையொன்றைத் தயாரித்து வருகிறது.**

**எனினும், புலிகளின் திட்டயோசனையை அரசாங்கம் முழுமையாக நிராகரிக்கவில்லை, பேச்சுக்கள் ஆரம்பமாகும்போது அரசாங்கம் எதை வலியுறுத்தப் போகின்றது என்பதை எடுத்துக்காட்டுவதற்கே இந்தத் தீர்வுத்திட்ட யோசனை தயாரிக்கப்படுகின்றது என – அமைச்சரவைப் பேச்சாளரான மங்கள சமரவீர தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக் கொழும்பில் நடந்த வேளையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான ஆலோசனை சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் வேளை அரசாங்கத்தரப்பு எதனைத் தெரிவிக்கப் போகின்றதென்பதனை குறித்துக்காட்டுவதற்கே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சடலத்துடன் ஈ.பி.டி.பியினர் திருமலையில் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருமலையில் உள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன்னேசுட்டுக் கொல்லப்பட்ட தமது உறுப்பினரின் சடலத்தை வைத்து ஈ.பி.டி.பியினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த செவ்வாய்க்கழமை இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டிபியின் சிரேஷ்ட உறுப்பினரான ஆத்மலிங்கம் றமணியின் சடலத்தினை திருமலை மாவட்ட ஈ.பி.டிபி முகாமில் இருந்து ஊர்வலமாக எடுத்து வந்த ஈ.பி.டிபி உறுப்பினர்கள் அவரது சடலத்தை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தின் முன்னால் வைத்து அரை மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பதாக குற்றஞ்சாட்டியதுடன் குற்றவாளிகள் உடனடியாக இனங்காணப்பட வேண்டும் எனவும், விசாரணை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலைக்கான புதிய தளபதி அரசியற் துறையினருடன் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட படைகளின்புதிய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குலத்துங்க திருமலை மாவட்ட அரசியல் துறையினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தோணி கவிழ்ந்து சிப்பாய் மரணம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வவுணதீவு வாவியில் மூன்று படையினர் சென்ற தோணியொன்று கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றைய இருவரும் நீந்திக் கரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அழநிலை மக்களின் அபிவிருத்திக்கே எம்.பிக்களின் நிதி செலவிடப்படும்!

### யாழ்.கூட்டமைப்பு எம்.பிக்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு என ஒதுக்கப்படும் நிதி குடாநாட்டு அடிநிலை மக்களது அபிவிருத்தித் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே யாழ்.மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான க.சிவசேநசன், எம்.கே.ஈழவேந்தன் செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் - இம

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஏதென்ஸ் ஒலிம்பிக் விழா இன்று ஆரம்பம்



### பல்கலை மாணவர் தெரிவின்போது

## பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்குமாறு மட்டக்களப்பு மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படும் போது - மட்டக்களப்பு மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாகக் கணிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்து, அந்த மாவட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு - காந்தி சதுக்கத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்காததால், அந்த மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெறும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சித் தலைவர் கூட்டத்திலிருந்து ஐ.தே.க எம்.பிகள் வெளிநடப்பு!

(கொழும்பு)

சபாநாயகர் டபிள்யு - ஜே.எம் லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையில் வெளியேறினர்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜெசூரிய மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட பின்னரே கூட்டத்திலிருந்து இடையில் வெளியேறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

தேர்தல் ஒன்று நடைபெறும் போது அடையாள அட்டையை பயன்படுத்துவது தொடர்பாக எதிர்வரும் 18,19 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென அரச தரப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# அரசாங்க அறிவித்தல்

## வாக்காளர் இடாப்பு திருத்தம் - 2004

(1) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் – 12 (1) ஆம் பிரிவின்படி 2004 ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் வாக்காளர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள். | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2.1 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம். | அரசாங்க அதிபர் அந்த மாவட்டத்துக்கு பதியும் அலுவலராயிருக்கும் அந்தந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான வாக்காளர் பதிவேட்டுப் பிரதி. |
| 2.2 பிரதேச செயலகம்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகம். | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |
| 2.3 மாநகர/நகர/பிரதேச சபை அலுவலகங்கள். | மாநகர சபைகள். நகர சபைகள் பிரதேசங்களினுள் வதியும் சகல வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள். |
| 2.4 ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம். | கிராம அலுவலர் பிரிவுக்குள்ளிருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகத் தகுதியுள்ள ஒவ்வொருவரும். தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

(4) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அந்த இடாப்பில் பதியப்படவில்லை எனக்காணும் ஒவ்வொருவரும்.

4.1 2004 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும்.

(5) த்தமது பகுதி கிராம அலுவலரிடம் 12.08.2004 ஆம் திகதி தொடக்கம் 10.09.2004 ஆம் திகதி வரை இவற்றுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி அவற்றினை மீள கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**உதவி பதியும் அலுவலர்**
**தேர்தல் மாவட்ட இல.10 - யாழ்ப்பாணம்.**

**தேர்தல்கள் அலுவலகம்,**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**11.08.2004.**

---

### ஆளொருவரின் பெயரை வாக்காளர் இடாப்பில் பதிவதற்கென அந்த ஆளாலேயே செய்யப்படும் விண்ணப்பம் - 2004

.............................. பிரிவு கிராம அலுவலர் ஊடாக. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட பதியும் அலுவலருக்கு.

01. .............................. ஆகிய நான் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எனது பெயரை ஒரு வாக்காளராகப் பதிவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

02. எனது விண்ணப்பத்தின் சார்பில் கீழ்க்காணும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

2.1 முழுப்பெயர்:– ..............................

2.2 விலாசம்:– ..............................

2.3 பிறந்த திகதியும். வயதும்:–.............................. (01.06.1986 ஆம் திகதியும். அதற்கு முன்னர் பிறந்தவர்களும் பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் என்பதைக் கருத்தில் கொள்ளவும்)

2.4 நீங்கள் இந்த வீட்டின் பிரதான குடியிருப்பாளரா?..............................

2.5 பிரதான குடியிருப்பாளருடனான உறவுமுறை..............................

2.6 2004.06.01 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட விலாசத்தில் சாதாரண குடியிருப்பாளரா?..............................

2.7 பால்:–.............................. இனம்:–..............................

2.8 பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக:..............................

2.9 தேசிய அடையாள அட்டை இல.:–..............................

03. வாக்காளர் பதிவு செய்யப்பட வேண்டிய இட விபரம்.

3.1 தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்.

3.2 வாக்கெடுப்பு பிரிவு:–..............................

3.3 வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:–:–..............................

3.4 கிராம அலுவலர் பிரிவும். இலக்கமும்–:–..............................

3.5 கிராமம்/வீதியின் பெயர்:–:–..............................

3.6 வீட்டு இலக்கம்:–:–..............................

3.7 மேற்குறித்த வீட்டு இலக்கத்தில் 2003 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள பெற்றோர்/உறவினர் விபரம்:–

| பெயர் | தொடர் இல |
|---|---|
| 1).............................. | .............................. |
| 2).............................. | .............................. |
| 3).............................. | .............................. |
| 4).............................. | .............................. |

திகதி:–2004..............................

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

---

#### கிராம அலுவலரின் சான்றிதழ்

குறிப்பு:– 2003 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு விபரம் பின்பற்றப்படல் வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

01. தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்.

02. வாக்கெடுப்புப் பிரிவு:–..............................

03. வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:–..............................

04. கிராம அலுவலர் பிரிவும். இலக்கமும்–..............................

05. கிராமம்/வீதியின் பெயர்:–..............................

06. வீட்டு இலக்கம்:–..............................

07. 2003 ஆம் ஆண்டு பதிவேட்டின்படி இந்தப் பெயர் பதியப்பட வேண்டிய பக்க இலக்கம்:–..............................(உதாரணம்:–அ/15/24)

மேற்காட்டப்பட்ட .............. என்பவர் வாக்காளராகப் பதியப்படுவதற்குத் தகுதியுடையவர். இவரின் பிறந்த திகதி .............. ஆகும். இந்தத் திகதி என்னால் பரிசீலிக்கப்பட்டது.

திகதி:–2004..............................

..............................
கிராம அலுவலரின் ஒப்பம்.
பதவி முத்திரை.

---

### தனது நெருங்கிய உறவினரொருவரை/தனது வீட்டில் குடியிருக்கும் ஒருவரை ஒரு வாக்காளராகப் பதிவதற்கு அவரின் சார்பில் வேறு ஆளாலே செய்யப்படும் விண்ணப்பம் - 2004

அ. எவர் சார்பாக விண்ணப்பிக்கப்படுகின்றதோ அவரின்.
முழுப்பெயர்:–..............................

ஆ. அவரின் தேசிய/வேறு அடையாள அட்டை இலக்கம்:–..............................

ஈ. அவருக்கும் எனக்குமுள்ள உறவுமுறை:–..............................

ஊ. அவரின பிறந்த திகதியும். வயதும்:–..............................

ஏ. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:–..............................

ஒ. வாக்காளராகப் பதிவு செய்யப்பட வேண்டிய இட விபரம்:–..............................

விலாசம்:–.............................. 

இ. அவர் பிரதான குடியிருப்பாளரா?..............................

உ. அவருடைய தொழிலும் தற்போதைய விலாசமும்–..............................

எ. பால்:–.............................. இனம்:–..............................

ஐ. விலாசம்.–..............................

01. தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்.

02. வாக்கெடுப்பு பிரிவு:–..............................

03. வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:–..............................

04. கிராம அலுவலர் பிரிவும். இலக்கமும்–..............................

05. கிராமம்/வீதியின் பெயர்:–..............................

06. வீட்டு இலக்கம்:–..............................

07. மேற்குறித்த வீட்டிலக்கத்தில் 2003 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளவர்களின் விபரம்:–

| பெயர் | தொடர் இல |
|---|---|
| 1) .............................. | .............................. |
| 2) .............................. | .............................. |
| 3) .............................. | .............................. |
| 4) .............................. | .............................. |

மேலேயுள்ள விபரங்கள் எல்லா வகையிலும் உண்மையானவை எனவும் , எந்த ஆள் சார்பில் இந்த விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த ஆள் மேற்குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்துக்கான வாக்காளர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:–2004..............................

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

---

#### கிராம அலுவலரின் சான்றிதழ்

குறிப்பு:– 2003 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு விபரம் பின்பற்றப்படல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

01. தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்.

02. வாக்கெடுப்பு பிரிவு:–..............................

03. வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:–..............................

04. கிராம அலுவலர் பிரிவும். இலக்கமும்–..............................

05. கிராமம் / வீதியின் பெயர்:–..............................

06. வீட்டு இலக்கம்:–..............................

07. 2003 ஆம் ஆண்டு பதிவேட்டின்படி இந்தப் பெயர் பதியப்பட வேண்டிய பக்க இலக்கம்:–..............................(உதாரணம்:–அ/15/24)

மேற்காட்டப்பட்ட .............................. என்பவர் வாக்காளராகப் பதியப்படுவதற்குத் தகுதியுடையவர். இவரின் பிறந்த திகதி என்னால் பரிசீலிக்கப்பட்டது.

திகதி:–2004..............................

..............................
கிராம அலுவலரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

(C/2927)

## பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்றுமுன்தினம் நண்பகல் ஒரு மணிநேர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் சம்பள உயர்வு, தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தும், இந்திய நிறுவனத்துககுப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை கையளித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே ஊழியாகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நண்பகல் 12 மணி முதல் 1 மணிவரை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் கூட்டுத்தாபன அலுவலகத்துகது முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

23 வீதமான சம்பள உயர்வு வழங்கப்படவேண்டிய போதிலும், இதுவரை வழங்கப்படவில்லை. அதேநேரம் 2003 ஆம் ஆண்டிலிருந்து சம்பள நிலுவைகளும் வழங்கப்படவில்லை என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

## கிழக்கு படுகொலைகள் விசாரிக்க 4 பொலிஸ் குழுக்கள்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் கொலைச் சம்பவங்கள் குறித்து, விசாரணைகளை நடத்த நான்கு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக, மட்டக்களப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி மகேஸ் சமர திவாகர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் கொலைச்சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கென இந்த நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் ஒரே நாளில் மட்டும மூன்று பேர் சுடப்பட்டனர். இவற்றால் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஆயுதக் கொள்வனவுக்காக கடற்படைக்குழு சீனா பயணம்

கடற்படையினரின் போர்க்கப்பல்களின் போர்த்திறனை நவீனமயமாக்குவதற்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக மூன்றுபேர்கொண்ட உயர்மட்ட கடற்படை அதிகாரிகள் குழுவொன்று சீனாவுக்கு விஜயம் செய்துள்ளது.

கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையில் சென்றுள்ள இந்தக் குழுவினர் சீனாவிடமிருந்து நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக ஆராய்வரெனத் தெரியவருகின்றது.

குறிப்பாக கடற்படையின அதிவேகத் தாக்குதல் படகுகள் சூட்டுவலுவை அதிகரிக்கக் கூடிய பீரங்கிகளைக் கொள்வனவு செய்வது குறித்து இவர்கள் கவனம் செலுத்துவர் எனவும் தெரியவருகிறது.

இவர்கள் உடனடியாகவே ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுவார்களா என்பது உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை, போர்த் தளபாடங்களைக் கொள்வனவுசெய்வது தொடர்பாக சீனாவுடன் தனது முன்னைய ஒப்பந்தத்தை கடந்தவாரம் அரசாங்கம் புதுப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அப்துல் காதர் கைதுக்கு ஐ.தே.க கண்டனம்!

முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்துல் காதர் கைது செய்யப்பட்டமை குறித்து ஐக்கிய தேசியக்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

மக்கள் பிரதிநிதி ஒருவரை விசாரிக்கவோ, வேறு ஏதேனும் காரணங்களுக்காக நீதிமன்ற உத்தரவின்படி கைதுசெய்யும்முன்பு, இது தொடர்பாகச் சபாநாயகருக்கும், நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அறிவிக்கப்படவேண்டியது சாதாரண மரபு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல காதர் மக்கள் பணத்தை முறைகேடாகக் கையாண்டார் என்ற குற்றச்சாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வில்

## சந்தேகத்துக்கிடமான பிக்கு: உடன் வெளியேற்றப்பட்டார்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட பௌத்த பிக்கு ஒருவர் நிகழ்ச்சி இடம்பெற்ற பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரசாங்கத்தின் பாரிய நீர்வழங்கல் திட்டத்தின் ஆரம்ப விழாவின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நிகழ்ச்சி மேடையின் முன்வரிசையில் சந்தேகத்துக்கிடமான முறையில் அமர்ந்திருந்த இந்தப் பிக்குவின்மீது சந்தேகங்கொண்ட விழா ஏற்பாட்டாளர்கள், உடனடியாக ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இதுகுறித்து அறிவித்தனர்.

உசாரடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இவரைத் தனியாக அழைத்துசென்று விசாரணைக்குட்படுத்தியபோது, அவர் அழைப்பிதழ் இன்றியும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உடற்சோதனைக்கு உட்படாமலும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டமை தெரியவந்தது.

இதையடுத்து, உடனடியாகவே நிகழ்ச்சி இடம்பெற்ற பகுதியிலிருந்து இவரை ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அப்புறப்படுத்தினர். இதேவேளை இந்த நிகழ்ச்சியில் ப்ரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா ஒரு மணிநேரம் தாமதித்தே நிகழ்ச்சியில் கலந்துகொண்டதாகத் தெரியவருகின்றது.

## சந்தேகத்துக்கிடமான பொதி இராணுவத்தினரால் அழிப்பு!

(கொழும்பு)

நுவரெலியாவில் சந்தேகத்துக்கு இடமாகக் காணப்பட்ட பொதியொன்றை இராணுவ குண்டு செயலிழக்கச்செய்யும் பிரிவினர் வெடிக்கவைத்து அழித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை நுவரெலியாவில் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட பொதி தொடர்பாகப் பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

மாவட்ட நீதிமன்றத்துக்கு அருகில் காணப்பட்ட இந்தப் பொதியை இராணுவத்தின் வெடிபொருள் செயலிழக்கவைக்கும் பிரிவினர் வெடிக்கவைத்தனர். எனினும் இந்தப் பொதிக்குள் போத்தல்களே காணப்பட்டதாகத் தெரியவருகிறது. (01)

## வானொலி உபகரணங்களுடன் பத்துப்பேர் படையினரால் கைது!

உயர்சக்தி வாய்ந்த வானொலிக் கருவிகளைப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறாமல் ஓமந்தை சோதனைச் சாவடியூடாகக் கொண்டுசெல்ல முயன்ற பத்துப் பேரைப் படையினர் கைதுசெய்துள்ளதாக படைத் தலைமையகம் தெரிவித்தது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பத்துப்பேரும் ஏ.பி.சி. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் தமது ஒலிபரப்புச் சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் இரண்டு வாகனங்களில் இந்த வானொலிக் கருவிகளைக் கொண்டுவந்தவேளை - ஓமந்தை சோதனைச் சாவடியில் படையினரின் சோதனையின்போது இது கண்டுபிடிக்கப்பட்டதுடன், அவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் தமிழரெனவும், மிகுதி ஒன்பது பேரும் சிங்களவர்களௌனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களும், இவர்களது வாகனங்கள் மற்றும் உபகரணங்களும் படையினரால் வவுனியாப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்தப் பத்துப் பேரும் நேற்றுமுன்தினம் வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

### இரண்டு மாதங்களுக்குள்

## 748 பாடசாலைகளை நவீனமயப்படுத்தத் திட்டம்

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



இரண்டு மாதங்களுக்குள் 748 பாடசாலைகளை நவீனவசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஊவா மாகாண அபிவிருத்தி தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள 748 பாடசாலைகள் சகல வசதிகளும் கொண்டதாக மாற்ற நாம் திட்டமிட்டுள்ளோம். இதற்கமைய தகுதிவாயந்த அதிபர்கள், ஆசிரியர்களைக்கொண்டு இந்தப்பாடசாலைகள அபிவிருத்திசெய்யப்படவுள்ளன.

நூலகவசதி, ஆய்வுகூடவசதி முதலானவற்றுடன் சிறந்த விளையாட்டு மைதானம் மற்றும் கட்டட வசதிகள் கொண்டவையாக அவை மாற்றப்படவுள்ளன.

அரசின் அபிவிருத்தித் திட்டத்தில் இதுவும் ஒன்றாகும். அத்தோடு மாகாணசபைகள் தத்தமது பகுதிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு பாடங்கள் சார்ந்ததான இடமாற்றங்கள் வழங்கப்படவேண்டும். அவ்வாறு இடமாற்றம் வழங்காத மாகாணசபைகளுக்கான சகல கொடுப்பனவுகளும் ரத்துச்செய்யப்படும்.

கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு அரசு நடவடிக்கையெடுத்து வருகிறது. நாட்டின் சகல மாகாண சபைகளையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## தென்னிலங்கையில் பெருமளவு வெளிநாட்டவர் விபச்சாரத்தில்!

தென்னிலங்கையில் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வருடங்களுக்குள் வெளிநாட்டு விபச்சாரிகளின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளதாகவும், இவர்களில் பலர் - சீனா, தாய்லாந்து, ரஷ்யா முதலான நாடுகளைச் சேர்ந்தவர்களெனவும் தெரியவருகிறது.

தென்னிலங்கையில் சட்ட விரோத விபச்சார மையங்கள் பல இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கையில் காணப்படும் பலமற்ற சட்டம் காரணமாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாதுள்ளதாக பொலிஸ் மா அதிபர் இங்கிரா டி சில்வா தெரிவித்தார்.

பொதுமக்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் வகையில் இவர்களது நடவடிக்கைகள் அமைவது குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால், அவர்கள்மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கக்கூடியதாக இருக்கும்.

இதேவேளை, தென்னிலங்கையிலுள்ள வெளிநாட்டு விபச்சாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் காணப்படுவதன் காரணமாக இவர்கள் தப்பிச்செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகிறது.

இத்தகைய குற்றச் செயல்களுக்கு அரசியல்வாதிகள் மட்டுமன்றி குடிவரவு அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகளும் காரணமாக விளங்குவதாகவும் பொலிஸ் திணைககள வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளது.

## லஞ்சம்பெற முயன்ற இன்ஸ்பெக்டர் கைது

30 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற முயற்சித்த ரிசேர்வ் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை லஞ்ச ஊழல் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெயதனர்.

போதைப் பொருள் வைத்திருந்த பௌத்த மதகுரு ஒருவரைக் கைது செய்யாமல் இருக்க 30 ஆயிரம் ரூபா லஞ்சம்பெற முயற்சித்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

உரிய தொகையைக் கொடுக்கும்வரை மதகுருவின் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை அதற்கு ஈடாக வைத்திருந்ததாக லஞ்ச ஊழல் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். கையடக்கத் தொலைபேசியைப் பெற்றுக்கொள்வதற்காக 20 ஆயிரம் ரூபாவைப் பெண்ணொருவரிடம் மதகுரு பெற்றுள்ளார் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்ததாக அவர் குறிப்பிட்டார்.

## இந்திய ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு

ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் 49 ஆவது வருடாந்த விழாவில் பங்குபற்றுமாறு அந்தச் சங்கத்தால் இந்திய ஊடகவியலாளர் 30 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதுடெல்கியில் உள்ள தொழில்சார் ஊடகவியலாளர்களது இந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புக்கு இந்த அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இதேவேளை, குறிப்பிட்ட இந்தச் சங்கத்தின் பெயருடனான இந்தியப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளதாகவும், அவர்களோடு இலங்கைப் பத்திரிகையாளர் குழு எந்தத் தொடர்பையும் வைத்திருக்கவில்லை எனவும் அந்தச் சங்கத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

## புலிகளின் முகாம்களை கண்டறிவதற்கு கண்காணிப்புக்குழு திருமலை செல்லும்!

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி விடுதலைப் புலிகளால் முகாம் அமைக்கப்பட்டுவருவதாகப் பாதுகாப்பு அமைச்சால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, அது போன்ற முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் திருகோணமலை செல்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

முப்படைத் தளபதிகளுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

துறைமுகத்துக்கு அச்சுறுத்தலாக முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தால், அவற்றை அகற்றுவது தொடரபாக புலிகளின் தலைமைப்பீடத்துடன் தொடர்புகொள்ள இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, திருகோணமலையில் புலிகளால் முகாம் அமைக்கப்பட்டுள்ள இடம் உட்பட பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து முழுமையான அறிக்கையொன்றை கண்காணிப்புக் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் தலைமையத்தால் - திருமலை இராணுவத் தலைமையகத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (தே)

## நுண்கலைப்பீட பரீட்சை

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் கல்விபயிலும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை மாணவர்கள் நுண்கலைத்துறைப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியுமென யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார். (ப)

# தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இலங்கை 470 ஓட்டங்கள் குவிப்பு



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 470 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நேற்றுமுன்தினம் முதலாவது நாள் ஆட்டநேர முடிவில், 3 விக்கெட் இழப்புக்கு 303 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த இலங்கை அணி - நேற்று இரண்டாவது நாள் ஆட்டத்தை ஆரம்பித்தது.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் 157 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த சங்ககாரவும், சமிந்த வாஸ் 4 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

ஆயினும் ஆட்டம் ஆரம்பித்த சற்று நேரத்துக்குள் சமிந்த வாஸ் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த சமரவீர நிலைத்து நின்று ஆடினார். எனினும் 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவரும் ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்து டில்ஷான் 3 ஓட்டங்களுடனும், களுவிதாரண 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

அதேவேளை, எதிர்முனையில் நின்ற சங்ககார தனது அபாரமான விளையாட்டை வெளிப்படுத்தி இரண்டாவது சதத்தை அடித்தார்.

எனினும் எட்டாவது விக்கெட்டாக சங்ககார ஆட்டமிழந்தார். அவர் 357 பந்துகளில் 31 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 232 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்துவந்த உபுல் சந்தன நிலைத்து நின்று நிதானமாக ஆடி 40 ஓட்டங்களை அணிக்கு சேர்த்துக் கொடுத்தார்.

இதையடுத்து ஹேரத் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததையடுத்து 470 ஓட்டங்களுடன் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பொலக் 4, என்ரினி 2, போஜே 2, கலிஸ் மற்றும் கெய்வாட ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதையடுத்து தென்னாபிரிக்க அணி தனது ஆட்டத்தை ஆரம்பித்தது. ஒரு ஓட்டத்தை மட்டுமே அணி பெற்றிருந்த நிலையில் அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்



கிப்ஸ் சமிந்த வாஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் வான் ஜார்ஸ்வெல்ட் அபாரமாக ஆடி அரைச்சதத்தைப் பூர்த்திசெய்த நிலையில் ஜெயசூர்யாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இவர் 105 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 51 ஓட்டங்களைப் பெற்றார்.

இதையடுத்து போஜே களமிறங்கி இரண்டு பந்துகளை மட்டுமே எதிர்



கொண்டபோதும் - ஓட்டம் எதையும் பெறாமலே ஆட்டமிழந்தார்.

ஸ்மித் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், கலிஸ் ஆட்டமிழக்காமல் 1 ஓட்டங்களையும் பெற்று தென்னாபிரிக்க அணி 3 விக்கெட் இழப்புக்கு 116 என்ற நிலையில் இருந்தபோது இரண்டாவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

## மரதனோட்டம்

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கைதடி சந்தி, செம்மணி, முத்திரைச் சந்தி, கோப்பாய்ச் சந்தி, கைதடிச் சந்தி என்பவற்றுக்கூடான மரதன் ஓட்டப்போட்டி நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

இதில் நடராஜா காந்தரூபன் முதலாம் இடத்தையும், இராசரத்தினம் இராசேந்திரன் இரண்டாம் இடத்தையும், ஏகாம்பரம் ஜெயக்குமார் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

(31)




# ஒலிம்பிக் போட்டிகள் இன்று ஆரம்பமாகிறது



ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் கோலாகலமாக இன்று ஆரம்பமாகவுள்ளது. போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுமையாக முடிந்து விட்டன.



தங்கம், வெள்ளி, வெண்கலம்- இந்த மூன்று வார்த்தைகள்தான் வரும் 29 ஆம் திகதி வரை உலகில் மிக அதிகம் உச்சரிக்கப்படுபவையாக இருக்கும். நான்கு ஆண்டுகள் உலக விளையாட்டு ரசிகர்கள் மிக ஆவலுடன் காத்திருந்த ஒலிம்பிக் போட்டிகள் அதன் தாய் மண்ணில் அமர்க்களமாகத் தொடங்கவுள்ளது.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர், பிரான்ஸ் அதிபர் ஜாக்ஸ் சிராக் உட்பட பன்னாட்டுப் பிரதமர், அதிபர்கள், முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்க



வுள்ளனர்.

உலகமெங்கும் வலம்வந்த ஒலிம்பிக் ஜோதி, இப்போது கிரீஸ் நாட்டுக்குள்தான் சுற்றிக்கொண்டிருக்கிறது. ஏதென்ஸ் நகருக்கு 40 கி.மீ வடக்கே உள்ள புராதன மரதன் பகுதியை கடந்த செவ்வாய்க்கிழமை ஜோதி வந்தடைந்தது.

அங்கு அமர்க்கள வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கிருந்து நேற்று முன்தினம் கிளம்பிய ஜோதி இன்று ஒலிம்பிக் கிராமத்தை வந்தடையும்.

## செரீனா ஒலிம்பிக்கில் இல்லை

அமெரிக்காவைச் சேர்ந்தவர் முன்னணி ரெனிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ். முன்னாள் முதல் நிலை ஆட்டக்காரரான இவர், காயம் காரணமாக ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த ஒலிம்பிக்கின் இரட்டையர் பிரிவில் செரீனா சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.




## ஏதென்ஸ் ஒலிம்பிக்

# உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பம்!



(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் கால்பந்து ஆட்டங்கள் நேற்றுமுன் தினம் ஆரம்பமாகின. இதில் ஆண்கள் பிரிவில் நான்கு ஆட்டங்களும், பெண்கள் பிரிவில் 4 ஆட்டங்களும் இடம்பெற்றன.

முதலாவது சி பிரிவு ஆட்டம் ஆண்கள் பிரிவில் ஆர்ஜென்ரீனா - சேர்பிய அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் ஆர்ஜென்ரீனா 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் கபிரியேல் ஹென்சி என்பவர் ஒரு கோலை அடித்ததுடன், மற்றொரு கோலை அடிப்பதற்கு காரணகர்த்தாவாக விளங்கினார்.

சேர்பிய வீரரான அன்ட்ரிஜா டெலிபேசிக் கோல் ஒன்றை அடிக்க முயற்சித்தபோதும், அந்தப் பந்து கோல் கம்பத்திலிருந்து விலகி மிகத் தூரச் சென்றதனால் அவரது கோல் அடிக்கும் வாய்ப்பு தவறிப் போனது.

இரண்டாவது ஆண்கள் ஏ பிரிவில் யூரோ கிண்ணத்தைக் கைப்பற்றிய கிரீஸ் - தென்கொரிய அணிகளுக்கிடையில் இடம்பெற்றது.

இதில் தென்கொரியா 2-0 என்ற ரீதியில் முதற்பாதியில் முன்னணி வகித்தபோதும் பின்னர் கிரீஸ் வீரர்களான இயோனிஸ் தாராலிட்ஸ், டிமிற்றியோஸ் பபாடோ போலஸ் இருவரதும் இரண்டு கோல்களால் கிரீஸ் இந்தப் போட்டியை 2-2 என சமன் செய்தது.

ஏ பிரிவில் நடந்த மற்றைய போட்டியில் மாலி - மெக்சிக்கோ அணிகள் கோல் எதுவும் பெறாததால் அந்தப் போட்டி சமநிலையில் முடிந்தது.

சி பிரிவில் நடந்த துனீசிய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான போட்டி 1-1 என்ற நிலையில் இரு அணிகளும் பெற்றதனால் அதுவும் சமநிலையில் முடிந்தது.

பெண்கள் பிரிவில் ஜேர்மன் - சீன அணிகளுக்கிடையில் நடந்த ஆட்டத்தில் ஜேர்மன் 8-0 என்ற கணக்கில் சீனாவைத் தோற்கடித்தது. இதில் ஜேர்மனிய வீராங்கனை




பிரின்ஸ் 4 கோல்களை அடித்தார்.

ஒலிம்பிக் வரலாற்றிலேயே பெண் உதைபந்தாட்ட வீராங்கனை ஒருவர் 4 கோல்களை அடித்தது இதுவே முதற்தடவையெனத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றைய ஆட்டத்தில் அமெரிக்கா, கிரீஸை 3-0 என்ற கணக்கிலும், பிரேசில் 1-0 என்ற கணக்கில் அவுஸ்ரேலியாவையும், ஜப்பான் 1-0 என்ற கணக்கில் சுவீடனையும் தோற்கடித்தன.

# தோள்மூட்டு அறுவைச் சிகிச்சைக்காக முரளிதரன் அவுஸ்ரேலியா செல்கின்றார்

தோள்மூட்டு அறுவைச் சிகிச்சைக்காக முரளிதரன் அவுஸ்ரேலியா செல்லவுள்ளார். இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரும், சாதனைப் பந்துவீச்சாளருமான முத்தையா முரளிதரன் தோள் மூட்டு வலி காரணமாக, தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடவில்லை.

91 டெஸ்ட் போட்டிகளில் 532 விக்கெட்டுக்களுடன் முதலிடத்தில் இருக்கும் முரளிதரன் கடந்த சில நாட்களாக தோள் மூட்டு வலியால் அவதிப்பட்டார். இதனால் அவருக்கு எக்ஸ்ரே பரிசோதனை நடத்தப்பட்டது.

இந்தப் பரிசோதனையில் - முரளிதரன் தோள் மூட்டில் தேவையில்லாத கட்டியொன்று உருவாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் கட்டியை உடனடியாக அகற்றவில்லை என்றால், அது பின்னர் பெரிய பிரச்சினையாக உருவாகும் என்று மருத்துவர்கள் எச்சரித்தனர். இதற்காக அவர் அவுஸ்ரேலியா செல்லவுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவுஸ்ரேலியாவில் நடந்த டெஸ்ட் போட்டிகளை முரளிதரன் புறக்கணித்தார். அவுஸ்ரேலியப் பிரதமர் அவரைப் பற்றி விமர்சனம் செய்த காரணத்தால் சுற்றுப்பயணத்திலிருந்து அவர் விலகினார். இந்த நிலையில் தற்போது சிகிச்சைக்காக முரளிதரன் அவுஸ்ரேலியா செல்லவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி வார கிரிக்கெட்

# மானிப்பாய்; சுன்னாகம் அணிகள் வெற்றியைப் பெற்றன!

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் ஏற்பாட்டில் நடந்துவரும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் -

வலி.வடக்கு பிரதேசசபை அணியும், மானிப்பாய் பிரதேசசபை அணியும் மோதி, மானிப்பாய் பிரதேச சபை அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வலி. வடக்கு பிரதேசசபை அணி 11 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது.

இராசரத்தினம் 15 ஓட்டங்களையும், ஜெயரூபன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அகிலன் 3 விக்கெட்டுக்களையும், சிவசுதன், லக்ஸ்மன், கமலகாந்த் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

55 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மானிப்பாய் பிரதேசசபை அணி 10 ஓவர்கள் நிறைவில் 60 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

ஆரம்ப ஆட்டக்காரர் அகிலன் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், சிவசுதன் 7 ஓட்டங்களையும், பூ.விஜயகுமார் 2 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்று அணியின் வெற்றிக்கு வழிசமைத்தனர்.

பந்துவீச்சில் ஜெயக்குமார் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதேவேளை, சுன்னாகம் பிரதேச சபை அணிக்கும், நல்லூர் பிரதேச சபை அணிக்கும் இடையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் - முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் பிரதேசசபை அணி 15 ஓவர் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பில் டிலிகன் 59 ஓட்டங்களையும், அகிலன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேசசபை அணி - சகல விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.

இறுதியில் சுன்னாகம் பிரதேச சபை அணி 52 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

பந்துவீச்சில் நிரஞ்சன் 4 விக்கெட்டுக்களையும், கஜேந்திரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

(100)

## தேசிய சேமிப்பு வங்கியின் படிவங்களுக்கு தட்டுப்பாடு

உப அஞ்சல் அலுவலகங்களில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் தேசிய சேமிப்பு வங்கியின் நாளாந்த வேலைகளுக்குரிய பாவனைப் படிவங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களில் நாளாந்தம் மேற்கொள்ளும் தேசிய சேமிப்பு வங்கிப் பணம், வைப்புச் செய்யும் படிவம், பணம் மீளப் பெறும்படிவம், இந்த வேலையுடன் சம்பந்தப்பட்ட படிவங்கள் கடந்த ஒரு வருடங்களாகத் தேசிய சேமிப்பு வங்கியினால் அனுப்பப்படாமையினால் பணம் வைப்புச் செய்வதில் பொதுமக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். (21)

## கிராம அலுவலர்களுக்கு உபகரணம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டு வரும் அலுவலகத் தளபாடங்கள் மற்றும் பிரயாணப் பை முதலியனவையே கடந்தவாரம் யாழ். பிரதேச செயலர் செந்தில் தலைமையில் வழங்கப்பட்டுள்ளன.

## பகுதிநேர ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியும், சாதாரணதர ஆங்கில மொழியில் 'உ' அல்லது 'ஏ' தரத்தில் சித்தியும் கொண்டவர்களிடமிருந்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விரும்புவோர் சுயவிபரங்களுடன் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பி வைக்கும்படி யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# விளையாட்டுத் துறையில் தென்மராட்சி பின்னணியில் இருப்பது வேதனையே!

### உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

1999ஆம் ஆண்டுக்கு முன், யாழ். மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் இரண்டாம் இடத்தில் நின்றபடி, முதலாம் இடத்தைப் பிடிக்க போட்டியிட்டு நின்ற தென்மராட்சி வலயம் இன்று மாவட்ட மட்டத்தில்கூட சாதனை எதையும் படைக்க முடியாது இருப்பதோடு, பல மடங்கு குறைவான மாணவர் தொகை கொண்ட வலயங்களினால் பின் தள்ளப்பட்டிருப்பது மிக வேதனையான ஒரு விடயமாகும் என தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி தெரிவித்தார்.

அண்மையில் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களிடையே விளையாட்டுத்துறையை மேம்படுத்தல் எனும் விடயம் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்-

இத்தனைக்கும் எமது வலயத்தில் 20,000துக்கும் மேல் மாணவர்கள் இருப்பது குறிப்பிட்டுக்கூற வேண்டியுள்ளது. 1999க்குப் பின் தென்மராட்சி வலய மாணவர்கள் எந்த ஒரு மாவட்ட மாகாணமட்டப் போட்டிகளிலும் பாராட்டக் கூடிய பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. மிகவும் திறமையான மாணவர்களும், ஆசிரியர்களும் இருந்தும் , விளையாட்டுத்துறையில் எமது வலயம் ஒதுங்கிப் போயிருப்பது விரும்பக் கூடிய ஒரு விடயமல்ல. இந்த விடயம் தொடர்பாக நாம் ஆய்வுகளை மேற்கொண்ட போது மாணவர்களுக்கு தொடர்பயிற்சிகள் கிடைக்காமையே மிகப்பிரதான காரணியாக அடையாளம் காணப்பட்டது.

இதற்கு உரிய தீர்வுகளைக் கண்டு, ஒழுங்கான செயற்பாடுகளை நாம் இப்பொழுதே முன்னெடுக்க ஆரம்பித்தால் நிச்சயமாக எமது வலயம் 2005ஆம் ஆண்டில் மாவட்ட, மாகாண தேசிய மட்டங்களில் விளையாட்டுத்துறையில் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கேற்றதான செயற்பாடுகளிலேயே எமது வலய உடற்கல்விப் பகுதியினராகிய நாம் செயற்பட்டு வருகின்றோம்.

எமது வலயத்தில் ஒரு வசதி மிக்க மைதானம் ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டு பொருத்தமான ஐந்து பாடசாலைகளது விபரங்களை மாகாண அமைச்சுக்கு எழுதிக் கேட்டிருந்தும் இதுவரை அவர்கள் அது பற்றி எதுவிதமான நடவடிக்கைகளும் எடுத்து வரவில்லை. இருப்பினும், இந்தக் குறையை நாம் பிரதானமானதாக எடுத்துக்கொள்ளாது, இருக்கின்ற மைதான வசதிகளைப் பயன்படுத்தியே சாதனைகளைப் படைக்கத் தயாராவோம். எமது வலயத்தைப் பொறுத்தவரை 40 வீதமான பாடசாலைகளில் ஓரளவு திருப்தியடையக் கூடிய வகையிலாவது மைதான வசதிகள் உள்ளன.

எமது வலய மட்டத்தில் ஆசிரியர்கள் அனைவரும் தமது ஆற்றல்களுக்கு ஏற்ற வகையில் தத்தமது பாடசாலைகளில் மாணவர்களது வயதுப் பிரிவுகள், விளையாட்டுக்கள் என்பவற்றைப் பகிரிந்து கொண்டு தொடர் பயிற்சிகள் அளிக்க முன்வருவார்களானால், அத்தகைய ஆசிரியர்களுக்குத் தேவையான ஊக்குவிப்புக்களைப் பெற்றுத்தர எமது வலயம் நடவடிக்கை எடுக்கும். அத்துடன் அவர்களுக்கு ஒரு சில சலுகைகளையும் அதிபர்களுக்கு ஊடாக பெற்றுக் கொடுக்கவும் முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (31)

## ஸ்ரான்லிக் கல்லூரியில் ஒருநாள் செயலமர்வு

(அரியாலை)

ஜெய்க்கா செயல்திட்டத்தின் கீழ் பாடசாலை மட்டத்திலான ஒரு நாள் செயலமர்வு ஒன்று நாளை சனிக கிழமை யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் இந்த ஒருநாள் செயலமர்வில் ஜெய்க்கா நிறுவனத்தினரால் பாங்கொங்கில் நடாத்தப்பட்ட விஞ்ஞான பரிசோதனைச் செயலமர்வுகளில் காண்பிக்கப்பட்ட பரிசோதனைகள் செய்து காட்டல், கட்டற்ற வகுப்பறைச் செயற்பாடுகள் பற்றிய விளக்கமும் திட்டச் செயற்பாடுகளின் முன்னேற்றம். மதீப்பீட்டு முடிவுகள் பற்றிய செய்து காட்டல் போன்றவை இடம்பெறுவதோடு இந்தச் செயற்திட்டம் இதுவரை காலமும் தயாரித்த கையேடுகளும் வழங்கப்படும். அத்துடன் மதிய போசனமும் வழங்கப்படும்.

இந்தச் செயலமர்வில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் முன் கூட்டியே தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (55)

### கல்வியியற்கல்லூரி வாகன சாரதிகளின்

## மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்கவில்லையென முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரியில் பணி புரியும் வாகன சாரதிகளுக்கு மேலதிகக் கடமை நேர கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை என சம்பந்தப்பட்ட நபர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கல்வியியற் கல்லூரி பதிவாளர் அழைக்கப்பட்டு இருந்தார். சம்பள கொடுப்பனவு தொடர்பாக தமக்கு எந்த வித் தொடர்பும் இல்லையென பதிவாளர் தெரிவித்தார். இதன் அடுத்த கட்ட விசாரணைகள் அடுத்த வாரத்தில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அறநெறி இறுதிப் பரீட்சை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட, இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கான - இறுதி பரீட்சை ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது

இந்தப் பரீட்சைக்கு மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்தி பெற்று, பதினொராம் ஆண்டில் கல்வி மேற்கொள்பவர்களும், ஏற்கனவே இந்தப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைய முடியுமென இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (31)

## குன்றும் குழியுமாகக் காணப்படும் சங்கானை வைத்தியசாலை வீதி

(சங்கானை)

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதி, கடந்த பல வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாததால் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால், இந்த வீதியைப் பாவனை செய்துவரும் பொது மக்கள், நோயாளிகள், பாதசாரிகள் உட்பட பலரும் பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்து செய்யவேண்டிய நிலையில் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அராலியூடாக சங்கானைக்கு வரும் வட பிராந்திய போக்குவரத்து சபை பஸ் சேவையும், இந்த வைத்தியசாலை வரை நடைபெற்று வருகின்றது. எனினும், சாதாரண ஒழுங்கைபோல் இந்த வீதி காட்சியளிப்பதால், எதிர்வரும் காலங்களில் மழைக்காலம் என்பதனால் போக்குவரத்துச் சிரமங்களை மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும். இந்த வீதி திருத்தம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை எடுத்துக் கூறியும், கடந்த 10, 15 வருடங்களுக்கு மேல் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். (48)

## அலுவலக சுற்றாடலை சிரமதானம் செய்யவும்

(யாழ்ப்பாணம்)

தற்போது நாடு முழுவதும் டெங்கு நுளம்புத் தொல்லை வேகமாகப் பரவ ஆரம்பித்துள்ளதால் சகல அஞ்சலகங்களும், உப அஞ்சல் அலுவலகம், சுற்றாடலை வாரந்தோறும் துப்பரவு செய்யும் வேலை ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், சகல அஞ்சல் அதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள் மற்றும் அஞ்சல் திணைக்களம் சார்ந்த உயர் அதிகாரிகளுக்கும், அஞ்சல் அதிபர் கே.ஏ.எஸ். சேனதீர சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். (21)

## தண்ணீர் தாங்கி இன்மையால் பயணிகளுக்குச் சிரமம்

குறிகாட்டுவான் இறங்குதுறை பகுதியில் பொதுமக்கள் பாவனைக்கென குடிநீர் தாங்கி இன்மையால் தற்போதைய கடும் வெப்பசூழலில் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நயினாதீவுக்கு வந்து செல்லும் பெருந்திரளான யாத்திரிகர்கள் மற்றும் நெடுந்தீவுக்குச் செல்லவென வந்து நீண்டநேரம் அந்தப் பகுதியில் தங்கிநிற்கும் பயணிகளென பலவிதமானோர் குடிநீருக்கு நாளாந்தம் அந்தப்பகுதியில் தவிக்கும் நிலை தொடர்கிறது.

நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இடம்பெற்றபோது, மட்டும் அந்தப்பகுதியில் நீர்த்தாங்கி வைக்கப்பட்டு வேலணை பிரதேச சபையினரால் குடிநீர் வழங்கப்பட்டது, திருவிழா நிறைவடைந்ததும் நீர்த்தாங்கியைக் கூட காணவில்லை.

இதேவேளை, அவசர தேவைக்கு அந்தப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் கடற்படையினரிடம் பெரும் சிரமப்பட்டே தற்போது பலர் குடிநீரைப்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (113)

## ஆங்கிலதினப் போட்டிகள்

யாழ் வலய ஆங்கிலதினப் போட்டிகளுக்கான தனி நிகழ்வுகள் எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும், குழு நிகழ்வுகள் யாவும் 24ஆம் திகதி யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் நடைபெறுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## தீவக கோட்ட எழுச்சிப் பேரவை ஒன்றுகூடல்

(வேலணை)

தீவகக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10 மணிக்கு அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வேலணைத் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் தீவக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது. (99)

## தீவகத்திலிருந்து மரங்கள் ஏற்றிவரத் தடை

விறகுக்காக தீவுப்பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மரங்கள் ஏற்றிவரத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் மக்கள் அற்ற வீடுகளில் கழற்றப்பட்ட மரங்கள் உட்பட பச்சைப் பூவரசு மரங்களும் தறிக்கப்பட்டு, யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிவரப்படுகின்றன.

இவ்வாறு கொண்டுவரப்படும் மரங்கள் அல்லைப்பிட்டியில் வைத்து கடற்படையினரால் பறிக்கப்பட்டு குவிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. (99)

## வீதிகள் திறக்கப்பட்டும் முட்கம்பிகள் அகற்றப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஞானப்பிரகாசம் வீதி, மல்வம் கிளை 8 அமைந் துள்ள கூட்டுறவு சங்கத்துக்குச் செல்லும் வீதியும், ஆலையத்துக்குச் செல்லும் வீதியும் மீளவும் திறக்கப்பட்டுள்ளது.

ஆயினும், அந்த வீதியில் அருகிலுள்ள முட்கம்பிகளை இராணுவத்தினர் விலக்கவில்லை. அதனால் அந்த மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தெரிவித்தனர். (87)

## ஆறுகால் மடத்தில் திருட்டு

(கொக்குவில்)

ஆறுகால்மடம் மற்றும் வண் - வடமேற்குப் பகுதிகளில் வீடு, கடை என்பவற்றில் திருட்டு சம்பவங்கள் சமீபத்தில் அதிகாரித்துள்ளது.

ஆறுகால் மடத்தில் எஸ். வைத்திலிங்கம் என்பவரது கடையின் முன்கதவுப் பூட்டுகளை உடைத்து, 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் மற்றும் பிஸ்கட், இனிப்பு வகைகள், சிகரட், பீடி, சம்பூ என்பன திருடப்பட்டிருப்பதாக அவரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருகிறது. (206)

## சுண்டுக்குளி அஞ்சலகத்துக்கு புதிய தபாலதிபர் நியமனம்

சுண்டுக்குளி அஞ்சலதிபராகக் கடமையாற்றிய ஐ.சின்னப்பு யாழ்ப்பாணம் பிரதேச கணக்காளர் அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரின் இடத்துக்கு வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் பிரதம அஞ்சலதிபராகக் கடமையாற்றிய எஸ். பாரதிதாசன் இடமாற்றம்பெற்று வந்துள்ளார். (21)

## இளைஞர் கழக உறுப்பினர்களுக்கான வதிவிடப் பயிற்சி

பிரதேச செயலகங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களுக்கான வதிவிட பயிற்சி நாளை ஆரம்பமாகவுள்ளது.

இளைஞர்மன்ற நடவடிக்கை பணியகத்தினால் யாழ். மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கழக உறுப்பினர்கள் இந்த வதிவிட பயிற்சி முகாமில் பங்குகொள்ள முடியும்.

வதிவிட பயிற்சி முகாம் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சி முகாமில் வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் இந்த வீரர்கள் முழுமையாக பயிற்றுவிக்கப்படவுள்ளனர். (தீ)

## சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

(மட்டுவில்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வடக்கு -கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிள்ளைகளுக்கான சிநேகபூர்வ சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு, சிறுவர்களது உரிமைகள், அவற்றைப் பாதுகாத்தல் என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் ஒவ்வொரு பிரதேசசெயலக மட்டத்திலும் செயற்திட்டங்களை வகுத்து சமூகத்தினரிடையே சிறுவர்களைப் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்துமாறு மேற்படி திணைக்கள ஆணையாளர் என்.ஆர். ரஞ்சினி சகல பிரதேச செயலர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு அந்தப் பகுதி சிறுவர் நன்னடத்தை அலுவலர்களது பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறும், இதற்காக 2 ஆயிரம் ரூபா திணைக்களத்தால் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (24)



## சிநேகிதியே



வாசுகி

# ஆண் பெண் சமத்துவத்தை சரியாக உணரும்போதே தீர்வு ஏற்படும்

**கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மெய்யியற்றுறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் வாசுகியுடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்களைத் தருகின்றோம்.**

யாழ்ப்பாணத்தில் துன்னாலை எனது பிறப்பிடம். ஆரம்பக் கல்வியை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிலும், கலைமாணிப் பட்டப்படிப்பை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும், முதுமாணிப் பட்டத்தை இந்தியாவிலுள்ள பூனே பல்கலைக்கழகத்திலும் முடித்து வெளியேறினேன்.

சமூகம் பற்றிய பிரக்ஞை சிறுவயது முதலே எனக்கு இருந்துவருகிறது. நான் ஒரு மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். சமூகத்திலும், அரசியலிலும் ஏற்படும் மாற்றம் பற்றிக் குடும்பத்தில் உரையாடக்கூடிய வாய்ப்பு இதனால் கிடைத்தமை ஓர் அரிய சந்தர்ப்பம் எனலாம்.

எமது சமூகமானது, கடந்த 25 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தைப் பல்வேறு வடிவில் எதிர்கொண்டிருக்கிறது. பல இழப்புக்களைச் சந்தித்துள்ளது. குடும்பங்கள் பிரிவதற்கு நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால், ஐரோப்பிய நாடுகளுக்கான இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட பிரிவுகள், குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரை நெருக்கடிக்குள்ளாகி வளர்ந்து வந்துள்ளதால், அவர்களுடைய வாழ்க்கை பற்றிய, உலகு பற்றிய, சக மனிதர்கள் பற்றிய நோக்குகள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. இயல்பான சூழலில் வாழவில்லை. தனக்கென ஒரு குடும்ப வாழ்க்கை அமைத்து, அதை வழிநடத்தும் போது பல பாதிப்புக்கள் எழக்கூடிய வாய்ப்பு உண்டு. இந்த நிலையில் அவர்களை சரியான முறையில் வழி நடத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது. அந்தவகையில் பெரிய சமூகக் கடமையுள்ளது.

எங்களுடைய உளநலம் தனிமனித அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த உளநலத்தை ஏற்படுத்தக்கூடிய உளவலுவூட்டல் திட்டங்கள் தேவை. ஓரளவுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் இவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதைவிட சிறு குழுக்களாக முகாம்களை ஏற்படுத்தி, இது தொடர்பாக உரையாடுவது, மனம் திறந்து கதைப்பது என்பவற்றின் மூலமும், பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். ஆசிரியர்கள், வீட்டில் இருக்கும் பெரியவர்கள் இவ்வாறான வழிகாட்டல்களை எடுத்துச் செல்லவேண்டும். இது பற்றிய விளக்கங்களை உரியவர்களிடமிருந்தும், வாசித்து அறிந்து கொள்ளலாம்.

ஒருவர் தான் செய்ய விரும்பிய காரியங்களை செய்யமுடியாமல் போகும்போதும், பொருத்தமான பொழுதுபோக்குகள், ரசிக்கத்தக்க வகையில் தன்னுடைய ஓய்வு நேரத்தைச் செலவிடமுடியாமை, இயந்திரத்தனமான வாழ்க்கை போன்ற காரணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

தன்னால் சாதிக்க முடியாது என்ற உணர்வும், எடுக்கும் காரியம் வெற்றியடைய முடியாமல்போகும் சந்தர்ப்பங்களிலும் மனிதனுக்கு மனச்சோர்வு ஏற்படுகிறது. மனச்சோர்வு அடைந்த ஒருவருக்குச் செய்யக்கூடிய உதவி தன்னால் சில காரியங்கள் செய்யமுடியும், வெற்றியடையவும் முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது. சிறிய சிறிய காரியங்களில் ஈடுபட்டு, அதனுடைய வெற்றியைப் பெற்றுக் கொடுக்கமுடியும். தாமாக விடுபடமுடியாதவர்களை மற்றவர்கள் வழிநடத்த வேண்டும்.

ஆண் - பெண் புரிந்துணர்வு என்பதைப் பார்த்தால், ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமான புரிந்துணர்வை நண்பர்கள் என்றரீதியில் பார்க்கமுடியாதுள்ளது. எமது சமூகம் ஆண், பெண் நட்பை இன்றுவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அலுவலகத்தில் ஆண், பெண் வேறுபாடின்றி நண்பர்களாக இருப்பதன் மூலம், பல தேவைகளை இலகுவாகச் செய்யமுடிகின்றது. இதனால் பல சிக்கல்களிலிருந்தும் விடுபடமுடியும்.

கணவன் - மனைவி இருவரையும் எடுத்துப் பார்த்தால், அவர்கள் திருமண ஆரம்ப கட்டத்தில் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழ்வதையும், காலம் செல்லச்செல்லப் புரிந்துணர்வுத் தன்மை குறைவடைந்து செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. இதற்குச் சரியான பகிர்தலும், புரிந்துணர்வு இன்மையுமே காரணம். கணவனிடம் மனைவியும், மனைவியிடம் கணவனும் அன்றாட விடயங்களைப் பகிர்ந்துகொண்டு, சரியான புரிந்துணர்வை வளர்க்கும்போது, வாழ்வை உறுதிப்படுத்த முடியும். பகிர்தல், நேசிப்பு என்பதை ஆண்களைவிடப் பெண்கள்தான் கூடுதலாக எதிர்பார்க்கின்றார்கள். பலவிடயங்களை மென்மையாக, நுணுக்கமாகப் பெண்கள் பார்ப்பது போல ஆண்கள் அவ்வாறு பார்ப்பதில்லை.

பெண்களின் விடுதலை, சுதந்திரம் பற்றி சமூகத்துடன் தொடர்புபடுத்திப் பார்த்தால், காலம் காலமாக ஆண்கள்தான் பொருளாதாரத்தை வழங்குபவர்களாகவும், சொத்துரிமை கொண்டவாகளாகவும் காணப்படுகிறார்கள். பெண் - வீட்டு வேலை செய்பவளாகவும், பிள்ளை பராமரித்து வளர்ப்பவளாகவும், வெளிவேலைகளையும் பார்த்து, உழைக்க முடியாமல் போகும்போது, ஆண்களால் பிரச்சினைகள் எழுகின்றன.

கடந்த பத்தாண்டுகளாக ஆண், பெண் வேறுபாடின்றி கல்வி, தொழில்வாய்ப்புக் கிடைக்கின்றது. பெண்ணுக்கு உழைப்பையும், மனப்பலத்தையும் வழங்கியிருக்கிறது. எந்த நிலையிலும் தன்னால் வாழமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. அதேநேரம் பிள்ளைகளைச் சரியாக வளர்க்க முடியாமல் போதல், உடல் ஆரோக்கியம் பலவீனமடைதல் போன்ற பிரச்சினைகள் எழுகின்றன.

என்னுடைய கருத்துப்படி ஆண், பெண் சமத்துவத்தை ஆண்கள் சரியாக உணர்ந்து கொள்ளும்போது, பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு வழியேற்படுகின்றது. இதனை சமூகத்திலிருந்தும், குடும்பத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இதனைச் சிறுவர்களுக்கு விளக்கம் கொடுப்பதனாலும், சமத்துவமான சூழ்நிலை வளரும். கற்றலின்மூலம் நடத்தையில் ஏற்படும் மாற்றத்தினூடாக ஒரு தெளிவு ஏற்படுகின்றது. இந்தக் கல்வி அமைப்பினூடாகத்தான் நானும் கல்வி கற்றுவந்தேன்.

நேர்காணல் - இரா.சுபோதினி.

# குழந்தை வளர்ப்பில் கணவனின் பங்கு

குழந்தை வளர்ப்பு என்பது மிகச் சுலபமான பணி என்று பலரும் கருதி வந்த காலம் போய்விட்டது. மாறிவரும் வாழ்க்கை முறைகளும், ஒதுக்கப்பட்ட கூட்டுக்குடும்ப அமைப்பும் இன்றைய இளம் தம்பதிகளுக்கு ஒரு பிரச்சினையாக உருவாகிவிட்டது.

தாய்மை எய்திய பெண்ணுக்குத் தேவையான நேரத்தில், பரிவும், குழந்தையைப் பெற்ற பிறகு கிடைக்கவேண்டிய ஓய்வும் சத்துணவும், கவலையற்ற மனநிலையும் இன்றைய பெண்ணுக்குக் கிடைப்பதில்லை. வேலைக்குச் செல்லும் இளம் பெண்கள் ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்ற பதற்றத்தில் காலைப் பொழுதை ஆரம்பிக்கின்றார்கள். எனவே, கணவன் ஒரளவாவது மனைவிக்கு உதவுவது மிகவும் அவசியமாகிறது.

ஒரு பெண் கருவுற்றதிலிருந்து குழந்தையைப் பெற்று வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை முழுவதுமாக அவளே ஏற்றுக் கொண்டிருந்தால். தாய் வீட்டுக்குப் பேறு காலத்துக்கு அனுப்பிய மனைவியைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் இருக்கப் பழகியிருந்த கணவன்மார்கள், இன்று குழந்தை வளர்ப்பில் தங்களின் பங்கை வழங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

உதவவேண்டும் என்ற மனமிருந்தும் - வெட்கம், தயக்கம் காரணமாகப் பல கணவன்மார்கள் மனைவிக்கு உதவ முன்வருவதில்லை. பழைய பழக்கவழங்கங்களில் பிடிப்புள்ள வயதானவர்கள் உடன் இருந்தாலும், அவர்கள் எதிரில் மனைவிக்கு உதவ வெட்கப்படும் கணவன்மாரும் இருக்கிறார்கள்.

எப்படியிருந்தாலும், 'குழந்தைச் செல்வம்' கணவன் - மனைவி இருவருக்கும் பிரியமான செல்வம் என்பது மறுப்பதற்கில்லை. எனவே, உங்களுடைய பிரியமான செல்வத்தை எடுத்துத் தழுவி முததமிட்டு, உங்கள் அன்பைப் பொழிவதில் என்ன தயக்கம்? இதைக் கணவனுக்குப் புரியவைக்கவேண்டும்.

கணவன் ஒருவர் இவ்வாறு கூறுகிறார் - குழந்தைப் பருவத்தில் என் மகளை எடுத்துவைத்துக் கொஞ்சியதில்லை. அதன் விளைவாக இப்போது என் மகள் பாடசாலையிலிருந்து வந்ததும், நான் முன்னறையிலேயே அமர்ந்திருந்தாலும், என்னைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், அவளுடைய அன்னையிடம் ஓடிவிடுவாள். பாடசாலை நிகழ்ச்சிகளை அவளிடமே பகிர்ந்து கொள்வாள். இப்போது நான் இதற்காக மிகவும் வேதனைப்படுகிறேன் என்றார்.

மாறிவருகின்ற ஆண்களின் மனநிலையை நாம் வரவேற்க வேண்டும். தந்தை இதைத்தான் செய்வார். தாய்தான் இதைச் செய்வார் என்ற கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, 'குழந்தையின் வளர்ப்பில்' தாயும், தந்தையும் சமமாகப் பங்கு ஏற்பது மிக ஆரோக்கியமான விடயமாகும்.

எந்தவகையான உதவிகள் செய்யலாம் என்ற ஐயம் இளம் கணவன்மார்களுக்கு எழுவது நியாயமே. குழந்தைக்குத் தேவையான எல்லா உதவிகளையும் கூச்சமின்றி, அருவருப்பின்றிச் செய்யும் மனநிலையை முதலில் அவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

குழந்தையின் பால் போத்தலைக் கொதிநீரில் போட்டு சுத்தமாக வைத்திருக்க உதவலாம். விற்றமின் சொட்டு மருந்துகளைச் சரியான நேரத்துக்கு வாங்கி வந்து குழந்தைக்குக் கொடுப்பது, குளிப்பதற்கு உரிய வெந்நீரைச் சரியான சூட்டில் கலந்து எடுத்துக் குழந்தை குளிப்பதற்கு உதவலாம். குழந்தையின் உள்ளாடை நனைந்திருந்தால் அதை கழற்றிவிட்டு, வே. உள்ளாடையை மாற்ற உதவலாம், இரவில் குழந்தை அழுதால் மனைவி மட்டும் கண்விழித்துப் பார்க்காமல், கணவன் மனைவி இருவருமே மாறி மாறிக் கண்விழித்துப் பார்த்துக் கொள்ளலாம்.



மேலும், மனைவியின் பிரசவ நேரத்தில் அருகில் இருந்து அவளுக்கு ஆதரவாக இருந்து மனைவிக்குத் தைரியம் அளிக்கும் வகையில் கதைப்பது போன்றவற்றின்மூலம், மனைவிக்கு உதவ முடிகிறது. குழந்தையைப் பிரசவித்த பின்பு அலுவலகம் முடிந்து வீடு திரும்பிவரும்வரை, பிறந்த குழந்தையை அருகிலிருந்து பார்த்துக்கொள்வதும் ஆரோக்கியமான செயற்பாடுகள்தான்.

மிகச் சிறு பருவத்திலிருந்து தாய், தந்தை இருவரிடையே அன்பையும், அரவணைப்பையும், பாசத்தையும் பெற்ற குழந்தை - உடல் ஆரோக்கியத்துடனும், மன வளத்துடனும் வளர்கின்றது. மேலும் அந்தக் குழந்தை தந்தையிடமும், தாயிடமும் மனம் விட்டுப்பேசவும் தயங்குவதில்லை. எனவே, குழந்தையைப்பெற்ற பிறகு தாயும், தந்தையும் முன்பிருந்து பார்ப்பதைவிட அன்புடனும், பரிவுடனும் இருந்து குழந்தையைப் பேணி வளர்ப்பதே கட்டாயமாகும்.

குழந்தையைக் கவனித்துக் கொள்வதில் கணவன் - மனைவி இருவருக்குமே சமமான பொறுப்பு உண்டு என்பதும், அது 'ஒரு இன்பமான செயல்' என்பதும் கணவன்மார்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

✱

## சிநேகிதிக்கு ஒரு மடல்



### அன்புள்ள சிநேகிதியே

உன் நலம் வாழ எந்தநாளும் வேண்டும் உன் அன்புத் தோழி எழுதிக்கொள்வது.

புரட்சிக்கருத்துக்களைத் தாங்கி வந்த உனது மடல் கிடைக்கப்பெற்றேன். நண்பியே உனது கருத்துக்கள் நியாயமானவை என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அனைத்து விடயங்களிலும் பெண்கள் தலையை நுழைப்பது பெண்மை என்ற இயல்பை மாற்றிவிடுமோ என்கின்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

சரி நண்பியே! அது இருக்கட்டும் நீ அங்கு நேரம் என்பது மிகவும் விலை மதிப்பற்றது என்றும், நேரத்தை மிச்சப்படுத்துவது இயந்திர வாழ்க்கையில் இயலாத காரியமாக உள்ளது எனவும் எழுதியிருந்தாய்.

நமது நாட்டுப் பெண்களை எண்ணிப்பார்க்கும்போது, எனக்கு அழுவதா, சிரிப்பதா எனத் தெரியவில்லை. எமது பெண்களைப் பொறுத்தவரையில் நாளுக்கு இரண்டு மணித்தியாலமாவது ஐந்தாறு பெண்கள் ஒன்றுகூடி அரட்டை அடிக்காதுவிட்டால், நித்திரை வராது. நான் அனைத்துப் பெண்களையும் குறிப்பிடவில்லை சமூகத் தொடர்பாடல் என்பது மனிதனைப் பொறுத்தவரையில் இன்றியமையாதது. ஆனால், அதற்காகத் தேவையற்ற விடயங்களைக் கதைப்பது தேவையற்ற பிரச்சினைகளையே உருவாக்கிவிடும்.

இன்றும் சில கிராமங்களில் ஐந்தாறு பெண்கள் முற்றத்திலே குந்தியிருந்து கதைகள் அளப்பதைக் காணலாம். இவர்கள் பிரயோசனமான விடயங்களைக் கதைத்தால் பரவாயில்லை. வீணாக ஊர் வம்பு அளந்து தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கும் இந்த நிலைமை எமது சமூகத்தில் மாற வேண்டும்.

இவ்வாறு நான்கு பேர்கூடிக் கதைப்பதும், பின்னர் ஒருவர் இல்லாத இடத்து அவரைப்பற்றிப் புறம் பேசுவதும் பின்னர் அவை முககோணலுக்கு வழி செய்வதையும் தடுக்க, எமது பெண்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்தவேண்டும்.

ஓய்வு நேரங்களில் பெண்கள் ஒன்று சேர்ந்து கதைப்பதை நான் தப்பெனக் கருதவில்லை, தேவையற்ற விடயங்களைக் கதைப்பதை விடுத்து ஆரோக்கியமான விடயங்களைக் கதைத்தால் அது அனைவருக்கும் பிரயோசனமாக அமையும்.

ஓய்வு நேரங்களில் மனதுக்கு மகிழ்வைத் தரக்கூடிய விதமாகப் பூக்கன்றுகளை வளர்த்து, வீட்டை அழகுபடுத்தலாம். இதைவிட வீட்டுத் தோட்டங்களைச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவதன்மூலம், பொருளாதாரத்தை ஈட்டுவதுடன் பிரயோசனமாக நேரத்தைச் செலவிடமுடிகின்றது.

சிறுதொழில் முயற்சி பற்றிய சந்தேகங்களை ஒருவருடன் ஒருவர் பேசி நல்ல பயனைப்பெற முடியும்.

மேலும், குழந்தை வளர்ப்பு, சமூகத்தில் இன்றைய பெண்களது நிலைமை என்பன தொடர்பாகக் கலந்துரையாடலாம். பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து மாதர் சங்கங்கள், நற்பணி மன்றங்கள் போன்றவற்றை அமைத்து, தமது சூழலின் தேவைக்கு ஏற்ப நல்ல சேவைகளைச் செய்யலாம்.

இவ்வாறாகப் பயனுள்ள விடயங்களை விடுத்து 'குந்தியிருந்து குதர்க்கம் பேசும் நிலை' மாறவேண்டும். இதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து கொள்ளும்போது, இந்த நூற்றாண்டின் சாதனைச் சிகரத்தில் பெண் ஏறி நிற்பாள்

சரி தோழியே எனது கருத்துக்கள் பற்றிய உனது விமர்சனத்தை எதிர்பார்த்து இந்த மடலை முடிக்கிறேன்.

அன்புள்ள சிநேகிதி

நீலா.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

மண்டபம் முழுவதும் சனக்கூட்டம். ஒலி பெருக்கியில் பக்திப்பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. எனக்கு விருப்பமான பாட்டு அம்மனைப் பற்றியது. கேட்கக் கேட்கச் சலிக்காது. திடீரென்று பாட்டு நின்றது. பேச்சுக்கள் தொடங்கின. முதலில் யாரோ ஒருவர் ஆங்கிலத்தில் பேசினார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நல்லகாலம் அவர் 5 நிமிடம் தான் பேசினார். அடுத்து ஒரு துறவி பேசத்தொடங்கினார். அவர் பேச்சுக் கேட்க இனிமையாக இருந்தது. 'தெய்வம் நமக்குத் துணையாக



எப்போதும் இருக்கும்' என்று அவர் சொன்னபோது எனக்கு என் அப்பாவின் நினைவு வந்தது. அவர் என்னிடம் கடைசியாகச் சொன்னது அது தான்.... என் மனம் அசைபோடத் தொடங்கியது.

எங்கள் குடும்பம் பெரியது. பிள்ளைககள் எட்டுப்பேர். அப்பா, அம்மா சேர்த்தால் 10 பேர். நான் கடைக்குட்டி எனக்கு 5 அண்ணாமார் 2 அக்காமார். அக்காமார் இருவரும் கலியாணம் கட்டிவிட்டார்கள் ஆனால், எங்களோடு தான் இருந்தார்கள். அத்தான்மார் இருவரும் ஒரு நாள் திடீரெனக் காணாமல் போய்விட்டார்கள். அன்றைக்கு எங்கள் வீட்டில் ஒரே கலவரம். அக்காமார் அழுதினம்... ஆனால், போனவர்கள் இன்னமும் திரும்பி வரவில்லை. அப்போது அப்பா என்னை மடியில் இருத்திக்கொண்டு சொன்னார். இவளைப் பற்றி இனிமேல் எல்லோரும் யோசியுங்கோ' எல்லாரும் என்னைப் பார்த்தினம். என கால்கள் துவண்டு கிடந்ததை முதலில் பார்ப்பது போலப் பார்த்தினம். பெரியக்கா ஓடி வந்தாள். என்னை அப்பாவிடம் இருந்து தூக்கி இறுக அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பின் இறுக்கம் எனக்கு என்னவோ சொன்னது. சின்னக்கா ஒன்றுமே பேசவில்லை. ஆனால், அன்றிரவு அவள் யாரிடமும் சொல்லாமல் போய்விட்டாள். காணாமல் போனவர் வரிசையில் அவளையும் சேர்த்து 3 வருடமாக அப்பா தேடுகிறார்.

'பஞ்சபாண்டவர்' என்று செல்லமாக அழைக்கப்படும் எனது அண்ணாமார் பள்ளிக்கூடம் போவதில்லை. அப்பாவுக்குத் துணையாகவே வேலைக்குப் போனார்கள். அப்பா மேசன் வேலை செய்வார். அண்ணாமார் அவரோடு முட்டாள்வேலை செய்தார்கள். அதனால் நான் அவர்களை வரிசைப்படுத்தி முட்டாள் 1,2,3,4,5 என இலக்கம் சேர்த்துக் கூப்பிடுவேன்.

அண்ணாமாருக்கு என் மீது கோபமில்லை. என்னை அனுதாபத்தோடு பார்ப்பார்கள். என் கால்கள் அவர்கள் கண்ணில்படும் போது, எனக்கு அடிக்க அவர்கள் எப்படி வருவது... என்னால் நடக்க முடியாது. யாராவது தூக்கிக் கொண்டுதான் போகவேண்டும். அம்மாதான் என்னைக் குளிப்பாட்டிச் சட்டைபோட்டு அலங்கரிப்பாள். பெரியக்கா சோறு ஊட்டிவிடுவாள். என் ஊனம் எனக்குத்தெரியவில்லை.

ஒருநாள்... நள்ளிரவு... வீதியில் நாய்கள் குரைத்தன. நான் திடுக்கிட்டுக் கண்விழித்தேன். யாரோ வீட்டினுள் வந்தார்கள். அண்ணாமார் எல்லோரையும் அழைத்துச் சென்றார்கள். தடுக்கப்போன அம்மாவின் தலையில் அடிவிழுந்தது. அவள் சுருண்டு விழுந்தாள். பிறகு எழும்பவே இல்லை அப்பா அன்று தொடக்கம் பைத்தியமாகிவிட்டார். என்ரை 'பஞ்சபாண்டவர் எங்கே?' என்று எல்லோரையும் கேட்பார். சிலவேளைகளில் யாரோடும் பேசமாட்டார். எனக்கு 8 வயது வந்துவிட்டது. ஆனால், வயதுக்கேற்ற வளர்த்தி இல்லை. அக்கா கச்சான் வறுத்து விற்கும் தொழிலைத் தொடங்கினாள். என்னையும் கொண்டு கோயில் திருவிழாக்களில் கச்சான் விற்றாள். நாங்கள் இருந்த வீட்டைவிட்டு எழும்பிவிட்டோம். பாதுகாப்பு வல்யத்துக்குள் எங்கடவீடு அகப்பட்டுக் கொண்டது. அக்கா யார் யாரையே பிடித்து, ஒரு குடிசையை அம்மன் கோயிலடியில் அமைத்துவிட்டாள். அப்பாவும் இப்போது கொஞ்சம் மனம் தெளிந்து அக்காவுக்கு உதவி செய்தார். பழைய பேப்பரிலை கடதாசிப்பை ஒட்டுவார். நான் இருந்தபடியே பைக்குள் கச்சான் போட்டு வைப்பேன். கடதாசிப்பை ஒட்டும்போது அப்பா பத்திரிகைச் செய்தியையும் எனக்குப் படித்துக்காட்டுவார். அப்படித்தான் அண்ணாமார் பற்றிய செய்தியும் வந்தது 'வீரமரணம்' என்ற செய்தியில் பஞ்சபாண்டவர்களின் படமும் வந்திருந்தது. அப்பாவும், அக்காவும் அழவில்லை. எங்கள் குடும்பம் குலைந்தது மட்டும் தெரிந்தது. அப்பா அந்தப் படத்தை எடுத்து வெட்டி ஒரு மரப்பலகையில் ஒட்டினார். அதை எங்கள் வீட்டின் வலையில், கயிற்றில் தூக்கினார். அண்ணாமார் ஐவரும் சிரித்துக் கொண்டு நின்றார்கள். அப்பா அந்தப் படத்துக்கு ஒவ்வொரு நாளும் பூ வைத்து வணங்குவார்.

இன்றைக்கு அண்ணாமார் வீரமரணம் அடைந்து ஓராண்டு நிறைவாம். படத்தில் இருந்த திகதியைப் பார்த்து அப்பா சொன்னபோது எனக்கு ஒரு ஆசை வந்தது. அண்ணாமாரின் படத்துக்கு ஒரு பூமாலை போடவேண்டும். அப்பா சொன்னார் மாலை வேண்ட ஆகக்குறைந்தது 150 ரூபாவேணுமடி! காசுக்கு எங்கைபோறது 'கச்சான் விற்ற காசிலை வாங்குவம் அப்பா!' நான் வழி சொன்னேன். அக்காவிட்டை கேள்! அப்பா சொல்லிவிட்டுக் கடதாசிப்பை ஒட்டத் தொடங்கிவிட்டார்.

நான் அக்காவிடம் போய்க்கேட்டேன். அக்கா அண்ணாமாரின் படத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் குளமாயின. 'காசுவேணுமடி! கச்சான்காசு 50 ரூபா கிடக்கு. இன்னும் 100 ரூபா வேணுமே எனக்கு ஒரு புதிய எண்ணம் மனதில் வந்தது அக்கா! இண்டைக்கு நான் கச்சான்' விற்கப் போகின்றேன்! அக்கா என்னை அதிசயமாகப் பார்த்தாள். அக்கா இண்டைக்கு பின்நேரம் கோயிலடியில் ஏதோ கூட்டம் எண்டு ஒலி பெருக்கியிலை சொன்னவை. என்னை அங்கே கொண்டு போய்விடு! நான் கச்சான் வித்து மாலை வேண்டிப்போடுறன். அக்கா அரை மனத்தோடு சம்மதித்தாள். அம்மன் கோயிலுக்கு மேற்கே மாலைகட்டும் அப்பு வீடு இருக்கிறது. அவரிட்டை எந்த நேரமும் மாலை வாங்கலாம்.

நான் கோயில் வாசலில் கூட்டம் நடக்கும் இடத்துக்குக் கிட்ட கச்சான் கடையைப் பரப்பி உட்கார்ந்தேன். கூட்டம் தொடங்கியது. நிறையச் சனக் கூட்டம் சேர்ந்திருந்தது. நான் மேடையைப் பார்த்தேன் ஆறு பேர் இருந்தார்கள் ஒவ்வொருவராக ஏதோ பேசினார்கள். என்மனம் பேச்சில் எடுபடவில்லை. எல்லோருக்கும் அழகான மாலைகள் போடப்பட்டன. என்மனம் அந்த மாலைகளிலே லயித்தது. கச்சான் வியாபாரம் அவ்வளவு நடக்கவில்லை. சேர்ந்த காசை எண்ணிப்பார்த்தேன் 30 ரூபா மட்டும்தான், இன்னும் 70 ரூபா வேண்டுமே மேடையில் ஒரு அம்மா பேசவந்தா. அவவுக்கு என்னைப்போல ஒரு சிறுமி அழகான மலர் மாலையைப் போட்டு வணங்கினாள். அம்மா அந்த மாலையை உடனே கழற்றி வைத்துவிட்டுப் பேசத் தொடங்கினா நான் அவ கழற்றி வைத்த மாலையையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்பா! என்னைக் கூட்டிச் செல்லவரப் போறார். கூட்டம் முடியப்போகுது இனியாரும் கச்சான் வாங்க மாட்டினம். எனக்கு அழுகை வந்தது. அடக்கிக்கொண்டு அம்மனை நினைத்தேன். கண்ணைமூடி வணங்கினேன் 'பிள்ளை! கச்சான் தருகிறாயா!' குரல் கேட்டுக் கண்ணைத்திறந்தேன் கையில் மாலையுடன் அந்த அம்மா முன்னால் நின்று கொண்டிருந்தார். 20 ரூபாவுக்கு கச்சான் வேணும்! அம்மா காசைத் தந்தா! இன்னும் 50 ரூபாவேணும்! என் வாய் தடுமாறிச் சொல்லிவிட்டேன். என்ன பிள்ளை! அம்மா கேட்டார் நான் உண்மையைச் சொல்லவில்லை. வாய் தடுமாறிவந்துவிட்டது! மன்னிச்சுக் கொள்ளுங்கோ! என்றேன். அம்மா சிரித்தபடி என் முகத்தைப் பார்த்தார். நான் அவர் கையிலிருந்த மாலையைப் பார்த்தேன். நறுமணத்துடன் அது அவரின் கையில் தொங்கியது. அம்மா கச்சான் வாங்கிக் கொண்டு திரும்பினா. நான் சேர்ந்துபோனேன் கோயில் வீதி வெறுமையாகிவிட்டது. திடீரென அந்த அம்மா திரும்பி என் கைகளில் மாலையைத் தந்தா. நான் அதை வாங்கி என் கண்ணில் ஒற்றினேன் அவ என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனா.... நான் சிலிர்த்துப் போனேன். அப்பா என்னைத் தூக்கிக் கொண்டார்.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# சுலபமாகக் கிடைப்பவற்றில் கவனமும் வேண்டும்

இன்றைய உலகில் எல்லாமே சுலபமாகக் கிடைக்கின்றன. தொலைக்காட்சி நாடகங்கள், சினிமா ஆகியவைகளைப் பார்த்து, ஆடம்பரமாக வாழவேண்டும் என்றே சகலரும் நினைக்கிறார்கள். சினிமாவில் வரும் நடிகர்களைப் போல



மகிழ்ச்சியாக காலத்தைக் கழிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஆடம்பரப் பொருட்கள் எது வேண்டுமானாலும், சுலபத் தவணைகளில் கிடைக்கின்றன. கார், மோட்டார் சைக்கிள் கூட தவணை முறையில் கிடைக்கின்றன. எல்லாவற்றையும் வாங்கித் தள்ளிவிட்டு, மாதத் தவணைகளில் கட்ட முடியாமல் திணறுபவர்கள் அதிகம். ஆடம்பரமாக வாழ்பவர்கள் வெளிப்படையாக மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள். ஆனால், உள் மனதில் இவர்கள் மகிழ்ச்சியுடன் இல்லை. எதையும் அவர்கள் ஆக்கபூர்வமாகச் செய்யமுடிவதில்லை. மது அருந்தும் பழக்கம், புகைத்தல் போன்றவற்றில் ஈடுபடுவதுபோன்ற செயல்களால், தோல்விகளைச் சந்திக்கிறார்கள். இதனால், மற்றவர்களின் நல்ல உறவையும் இழக்க நேரிடுகின்றது.

அளவுக்கு மீறிய சுற்றுலாப் பயணங்கள், நீண்ட நேரம் தொலைககாட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து, ஏகப்பட்ட சினிமாப் படங்களைப் பார்ப்பதுபோன்றவை ஒருவரின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கக்கூடும். எதுவும் அளவுடன் இருக்க வேண்டும்.

பயனில்லாத அளவுக்கு ஓய்வு எடுப்பவர்கள் சோம்பலுக்கு ஆளாகிறார்கள். அதிக திறமையுள்ளவர்கள், மூளையுள்ளவர்கள்கூட திட்டமிட்டு செயலாற்றத் தவறிவிட்டால், உதவாக்கரையாக ஆகிவிடுவார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நல்ல இயந்திரத்தை வாங்கி, அதைப் பயன்படுத்தாமல், பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் பாவிக்காமல் வைத்திருந்தால், துருப்பிடித்து செயலிழந்து விடும். ஆற்றல் மிகுந்த மனிதர்களும் செயல் இழந்து வீணாக நேரத்தை கழித்துக் கொண்டிருந்தால் அதே கதி தான்.

நண்பர்கள் வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலும் இளவயதினருக்கு அதிகம் ஏற்படுகின்றனது. பள்ளியில் அல்லது பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதே நிறைய நண்பர்கள் வேண்டும் என்று நினைப்பது இயற்கை.

நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, எச்சரிக்கை உணர்வு மிகவும் தேவையாகும். நல்ல நண்பர்களை மட்டுமே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கும் நண்பர்கள் புத்திசாலி நண்பர்களாக இருக்கவேண்டும். மற்றவர்களுக்குத் தீங்கு நினைக்காதவர்களாக இருக்கவேண்டும்.

தொழில்பார்க்கும் இடத்தில்கூட இதே பாணியில்தான் நண்பர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நாம் சந்திக்கும் அத்தனை பேர்களையும் நண்பர்கள் என்று ஏற்றுக்கொள்ளக்கூடாது. அதேநேரத்தில், ஒருவர் பிடிக்காதவர், நட்புக்கு சரிப்பட்டுவிட மாட்டார் என்று தெரிந்தால், அவருடன் உறவு, வைத்துக்கொள்வதில் கவனம் எடுக்கவேண்டும். அவரோடு உறவு வைக்காமல் இருப்பது சிறந்த நடவடிக்கையாக இருக்கும். ✧

# இனங்காணப்படவேண்டிய உணர்வுகள்



மனிதன் சந்திக்கும், அவனைப் பாதிக்கும், இலகுவாய் ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்வுகள், சம்பவங்கள், அவனது ஆழ்மனத்துக்குச் சென்று, அவனை அறியாமலே, அவன் செயற்பாடுகளைப பாதிப்பதாக அமைகின்றன. பல சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட மனிதர்களுக்கே தாம் ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறோம். அதற்கான காரணம் என்னவென்பது புரிவதில்லை.

இன்று பொதுவாக ஒரு மனிதனின் வளர்ச்சி நிலையில் ஏற்படக்கூடிய பல முரண்பாடுகளுக்கான காரணங்கள் இளமைப் பருவத்திலேயே ஏற்படுகின்றது என்பது உளவியல நிஞர்களால் ஏற்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமைத் தொடர்பாடலில் சிக்கல், சுய மதிப்பில் வலுவின்மை, ஆளுமை வளர்ச்சியில் தடை என்பவற்றை ஏற்படுத்துகிறது. எனவே, அழுத்தம் தந்தவண்ணம் எம்முள், எம்மால் இனங்காணப்படாமல் மறைந்திருக்கும் உணர்வை இனங்கண்டு வெளிக்கொண்டுவருவதே பொருத்தமானது. அத்தகைய ஒரு சீராக்கத்தை எப்படி ஏற்படுத்துவது! ஒருவரின் முழு வெளிப்பாட்டையும் பூரணமாகக் கவனித்து, அவர் தான் மனந்திறந்து நம்பிக்கையுடன் பேசுவதன் மூலமும், உடல் அசைவுகளால் வெளிப்படுத்துவதன்மூலமும் அவரை அவருக்கே இனங்காட்டித் தனக்கு அழுத்தம் தருபவற்றை வெளிப்படச் செய்வதனால் அவரது உள்ளத்தைச் சீராக்க உதவலாம்.

மற்றும் கனவுகளைப் பகுப்பாய்வு செய்வதனால் அவரது எண்ணத்தை, பிரச்சினையை இனங்காணலாம். அதை அவரது கவனப்படுத்தலால் அவரே உணர்வதன்மூலம் அவரது உளச் சீராக்கத்துக்கு உதவலாம்.

பொதுவாக உளநலம் பற்றிய பிரக்ஞை மேலைத்தேச நாடுகளில் உணரப்படும் அளவு கீழைத்தேச நாடுகளில் உணரப்படுவதில்லை. உடலியல் பிரச்சினைகள் அடையாளம் காண்பதில் இருப்பதில்லை. (இது சமூக நிலையில் ஆராயப்பட வேண்டுவது) உளநலம் பாதிக்கப்பட்டதாகக் கூறுவது ஏதோ தீண்டத்தகாததுபோல் கருதப்படுகிறது. ஆனால், தவிர்க்கமுடியாதபடி அதனைப் பற்றிச் சிந்தித்துச் செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். அது காலத்தின் கட்டாயமாகிறது.



வன்னிப் பதிவுகள்

# தட்டுவன்கொட்டி கிராம அபிவிருத்தி ஒப்பந்தத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - ஜீ.ரி.இசற் கைச்சாத்து

(ஆனையிறவு)

பல தசாப்தங்களாக இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப் பெற்ற கிளிநொச்சி மாவட்டத்தின், ஆனையிறவுப் பிரதேசத்தின் தட்டு வன்கொட்டிக் கிராமத்தை - மீள அபி விருத்தி செய்து, மக்கள் வாழ்வதற் குரிய சூழலை ஏற்படுத்துவதற்கான ஒப்பநதத்தில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - ஜீ.ரி.இசற் நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த நிகழ்வு, நேற்றுமுன்தினம் தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பா ளர் லோ.கிறிஸ்ரி தலைமையில் நடை பெற்றது.

தட்டுவன்கொட்டிக் கிராம அபி விருத்தித் திட்ட ஒப்பந்தத்தில், தமி ழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி, ஜீ.ரி.இசற் நிறு வன வடமாகாண முதுநிலை ஆலோ சகரும், குழு முதல்வருமான வூல்ப் பாங் கரத்வா ஆகியோர் கையொப்ப மிட்டனர்.

தட்டுவன்கொட்டிக் கிராமததை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவைகள், திட்டத்தின் முக்கியத்து வம், எதிர்காலச் செயற்பாடுகள் குறித் துத் திட்டப் பணிப்பாளர் லோ.கிறிஸ்ரி, ஜீ.ரி.இசற் முதுநிலை ஆலோசகர் வூல்ப்பாங் கரத்வா, தாசம்மான் ஆகி யோர் மக்களுக்கு விளக்கினர்.

இந்தத் திட்டத்தின்கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் - ஜீ.ரி.இசற் நிதி யுதவியுடன் 110 வீடுகள், பொது மண் டபம், இயக்கச்சியிலிருந்து குடிநீர் விநியோகம், வீதி அமைப்பு உட்படப் பல அபிவிருத்திப் பணிகளை மேற் கொள்ளவுள்ளது.

இந்த நிகழ்வில், தமிழர் புனர் வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப் பாளர் கே.பி.றெஜி, திட்டப் பணிப் பாளர் லோ.கிறிஸ்ரி, தமிழர் புனர் வாழ்வுக்கழக சந்துரு, வன்னி தக வல் தொழில்நுட்ப நிறுவன இயக்கு நர் தாஸ், நிறைவேற்றுப் பணிப்பா ளர் சி.திலக், ஜீ.ரி.இசற் பிரதிநிதி கள், தட்டுவன்கொட்டிக் கிராம மக் கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஆனையிறவுப் பெரும் படைத் தளத்தைச் சூழ்ந்த இந்தக் கிராமம்- முற்றாக அழிவுண்ட நிலையில் மிதி வெடிகள், பொறிவெடிகள், முட்கம்பி வேலிகள், பாதுகாப்பு அரண்கள் நிறைந்து, பாதுகாப்பு அச்சுறுத்தல் மிக்க பகுதியாகக் காணப்பட்டது.

தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் - தட்டுவன்கொட் டிக் கிராமத்தில் மிதிவெடிகள், தடை யரண்கள் அனைத்தையும் அகற்றி, பாதுகாப்பை உறுதிசெய்து, மக்கள் மீளக்குடியமர்வதற்கு வழங்கி வரு கின்றனர்.

## வட்டக்கச்சி மகாவித்தியாலய உ.த பரீட்சை பெறுபேறுகள்

(கிளிநொச்சி)

கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கிளி நொச்சி - வட்டக்கச்சி மகா வித்தி யாலய மாணவ, மாணவிகள் அதிக புள்ளிகளைப் பெற்று, மாவட்ட மட் டத்தில் 1, 2 ஆம் இடங்களைப் பெற்று, பாடசாலைக்குப் பாராட்டைப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

வி.அருணா 2 ஏ, பி - மாவட்ட ரீதியில் 1 ஆம் இடம். ச.ரோகினி 2 ஏ, பி - பு.தர்மிகன் ஏ, 2 பி - மாவட்ட ரீதியில் 2 ஆம் இடம். கு.பிர சாந்தி ஏ, 2 பி - மாவட்டரீதியில் 4 ஆம் இடம்.

மற்றும் வா.கோமளா 2 ஏ,பி - பா.யாழினி ஏ,பி,சி - பா.சயந்தினி 2 ஏ, பியும் பெற்றுள்ளனர்.

(01)

## ஏ.ஏ.ரி.மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் ஏ.ஏ.ரி கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப் பட்ட அனைவரையும் இந்த மாதம் இறுதிக்குள் தொழில்நுட்பக் கல்லூ ரியுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு, கல்லூரி அதிபர் தி.பிரபாகரன் அறிவித்துள்ளார்

## வீடமைப்புக் கடன்

கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை வீடமைப்புக் கடனாக 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை வழங்கி வருகிறது.

இந்தக் கடனை மாதாந்தம் 7 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் அரச உத்தியோகத்தர் ஒரு வரின் பிணையுடன் பெறலாம்.

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுச் செய்தி

கீழே குறிப்பிட்டுள்ள பெயருடையவர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

**அலுவலக நேரம் :- திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8.00 மணி தொடக்கம் 5.00 மணி (விடுமுறை நாட்கள் தவிர)**

| | |
|---|---|
| 95. சேல்வரத்தினம் மேரி அஜந்தா | கடற்கரை வீதி, பருத்தித்துறை. |
| 96. த. சுந்தரலிங்கம் | ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை. |
| 97. குணசிங்கம் அருள்மொழி | மே/பா. சோமசுந்தரம் மங்களேஸ்வரி, V.M.வீதி, பருத்தித்துறை |
| 98. ரத்தின வடிவேல் ராமநாதன் | நெடியகாடு, வல்வெட்டித்துறை. |
| 99. பழனியாண்டி பாலேஸ்வரன் | புது வீதி, வல்வெட்டித்துறை. |
| 100. உதயகுமார் சந்திரவதனி | கற்கோவளம் இடம்பெயர்ந்தோர் முகாம், பருத்தித்துறை. |
| 101. தங்கலிங்கம் கண்ணகிதேவி | கற்கோவளம் இடம்பெயர்ந்தோர் முகாம், பருத்தித்துறை. |
| 102. குணபாலசிங்கம் மனோண்மனி | சூசையப்பர் கோயிலடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை. |
| 103. ஜெ. செபமாலை | புனிதநகர், கற்கோவளம், பருத்தித்துறை. |
| 104. தாசீசியஸ் மேரி லிப்னா | புனிதநகர், கற்கோவளம், பருத்தித்துறை. |
| 105. ஜோர்ஜ் அந்தோனியாப்பிள்ளை | புனிதநகர், கற்கோவளம், பருத்தித்துறை. |
| 106. சபாபதிப்பிள்ளை | ராதா வாசம், வல்வெட்டி. |
| 107. தம்பாப்பிள்ளை செல்வரத்தினம் | வல்லாலை ஒழுங்கை, தும்பளை. |
| 108. வரப்பிரகாசம் மேரி மெட்டலின் | தொம்மையப்பர் வீதி, பருத்தித்துறை. |
| 109. ருசீந்திரம் ஜெயலட்சுமி | தேனியம்பை வீதி, வல்வெட்டித்துறை. |
| 110. விவேகானந்தராசா கிருஸ்ணகுமார் | ஜீவன்ஸ் இல்லம், பன்னையம்பதி, பருத்தித்துறை. |
| 111. கந்தசாமி சின்னக்கிளி | சல்லி வளவு, பொலிகண்டி. |
| 112. நடராசா கந்தசாமி | தங்கவேலாயுதம், சுப்பர் மடம், பருத்தித்துறை. |
| 113. ப. வேலும் மயிலும் | வல்வெட்டித்துறை. |
| 114. லிங்கராசா தமிழகம் | A.G.A. ஒழுங்கை, வல்வெட்டித்துறை. |
| 115. இன்னாசிமுத்து லோயலா | ஹென்றியரசர் கல்லூரி முன்பாக, இளவாலை. |
| 116. தியாகராசா தனலட்சுமி | கல்வலை பிள்ளையார் கோயில் தெற்கு வீதி, சண்டிலிப்பாள். |
| 117. கதிரன் மேரி | உச்சியோடை, மானிப்பாய் வடக்கு. |
| 118. கிருஸ்ணசாமி அன்புராணி | புலவர் இடம்பெயர்ந்தோர் முகாம். நவாலி. |
| 119. வேலாயுதம் சத்தியபாமா | அளவெட்டி தெற்கு, அளவெட்டி. |
| 120. வைரமுத்து ராஜேஸ்வரி | சிறிபவனம், சங்குவேலி, சண்டிலிப்பாய். |
| 121. செல்வராசா மைதிலி | மே/பா. A.M.அல்பிரட் (ஆசிரியர்), டச்சுவீதி. பண்டத்தரிப்பு. |
| 122. அரியகுட்டி லட்சுமிப்பிள்ளை | சுதுமலை கிழக்கு, மானிப்பாய். |
| 123. நாகம்மா செல்வராசா | மானிப்பாய் வடக்கு. |
| 124. சிவஞானசுந்தரம் சுந்தரராணி | இலவச கல்வி நிலையம், மானிப்பாய். |
| 125. அப்புத்துரை விக்னேஸ்வரன் | தம்பலாவத்தை, அளவெட்டி தெற்கு. |
| 126. மனோகரன் லலிதா | சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. |
| 127. சவுந்தரராசா ஜெகதாம்பாள் | சங்குவேலி, மானிப்பாய். |
| 128. நடேசு சரஸ்வதி | சுதுமலை தெற்கு, மானிப்பாய். |
| 129. சங்கரப்பிள்ளை ல சுமி | மே/பா.நகுலேஸ், கட்டுடை, மானிப்பாய். |
| 130. எனோக் மெற்றில்டா | கீரிமலை வீதி, பெரியவிளான். |
| 131. கந்தசாமி நாகராசா | அந்தோனிவாசா, பத்திமா வீதி, மாதகல். |
| 132. கஜராகவன் | புளியடி வளவு, பெரியகிணற்றடி, அளவெட்டி. |
| 133. தேவராசா ராஜேஸ்வரி | அம்மன் கோயிலடி, மானிப்பாய் மேற்கு. |

(c/2924)

(தொடரும்)

### காவல்துறையால்

# வீதிப் போக்குவரத்து குறித்து சாரதிகளுக்கு அறிவுறுத்து

(கிளிநொச்சி)

தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் - நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட சகல பிரிவுகளின் சாரதிகளையும் அழைத்து, வீதிப்போக்குவரத்துத் தொடர்பான அறிவுறுத்தற் கூட்ட மொன்றை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் மாலை ஒரு மணி யிலிருந்து மூன்று மணிவரை நடந்த இந்த அறிவுறுத்தற் கூட்டம் - தமிழீழ காவல்துறை துணைப் பொறுப்பாளர் மாதவன் தலைமையில் நடைபெற்றது.

இதில், வீதிப்போக்குவரத்துப் பிரிவு கண்காணிப்பாளர் கனகலிங் கம் - வீதிப்போக்குவரத்துக் குறித்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இந்த அறிவுறுத்தற் கூட்டத்தில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரிவுக்குட்பட்ட மனிதநேய கண்ணி வெடியகற்றும் பிரிவுச் சாரதிகள், கல்விசார் பிரிவினர், தொழில்நுட்பப் பிரிவினர் (ரெக்) போன்ற பிரிவுகள் உட்பட ஏனைய பிரிவுகளின் சாரதி களும் இதில் கலந்துகொண்டனர்.

# வன்னியில் பல்கலைக்கழகம் இன்று மகஜர் கையளிப்பு!

வன்னியில் பல்கலைக்கழக மொன்றை அமைப்பது தொடர்பான மகஜர் ஒன்றை, இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலை வரிடம் வன்னி மக்கள்குழு கையளிக்கவுள்ளது.

வன்னியில் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக - வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கைச் சேர்ந்த அரச உயர் அதிகாரிகள், புத்திஜீவிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலானோரின் கையொப்பத்துடன் கூடிய மகஜரையே மக்கள் குழு கொழும்பில் வைத்து இன்று கையளிக்கவுள்ளது. இந்த மகஜரின் பிரதி ஒன்று கல்வி அமைச்ச ரிடமும் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்கள் குழுவில் - வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள உயர் அதிகாரிகள், புத்திஜீவிகள் மற்றும் வவுனியா வளாகத்தின் ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள் உட்படப் பலர் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மக்கள் குழுப் பிரதிநிதிகள் -அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வின்போது, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரின் ஏற்பாட்டில் பிரதிக் கல்வி அமைச்சரைச் சந்திக் கவுள்ளதாகவும் தெரியவருகிறது.


# மாபெரும் விவசாய கண்காட்சி

* தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் * கால்நடை உற்பத்தி திணைக்களம்
* விவசாய திணைக்களம் * கைத்தொழில் திணைக்களம்

என்பன இணைந்து நடாத்தும் மாபெரும் விவசாய கண்காட்சி.

இடம் : ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி.

காலம் : 01.09.2004 தொடக்கம் ~ 04.09.2004 வரை

ஆர்வலர்களே!

- தங்கள் சந்தேகங்களை தீர்ப்பதற்கும்,
- மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும்,
- சறநத தொழலநுடப முறைகளைக கணடறவதறகும, செயகை முறையலும, ஒளபபட, புகைபபடக காடசயுடனும், திட்ட விளக்கவுரைகளுடனும் நடைபெற உள்ளது.

ஆர்வம் உள்ளவர்கள், சிறந்த உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விவசாய, கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும், விற்பதற்கும் நாடுங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வட்டக்கச்சி.

(சு - 2804)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

திருக்குறள்

# நமது நோக்கு

## சிவில் சமூகத்தவரின் கருத்து ஜனாதிபதியின் காதில் ஏறுமா ?

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினை சமாதானப் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் எட்டுவதற்கு தற்போது தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளை அடிப்படையாக வைத்து பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதே சிறந்த மார்க்கமாகும் எனவும், அதன்படி செயற்படுவதன் மூலமே சமாதான முயற்சிகளை நம்பிக்கையூட்டும் வகையில் முன்னெடுக்க முடியுமெனவும் சிவில சமூக அமைப்பினைச் சேர்ந்தவர்களான தென்னிலங்கை முக்கியஸ்தர்கள் இலங்கை சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

உண்மையில் தென்பகுதி சிவில் சமூகத்தவரின் இந்த நிலைப்பாடானது மிகவும் ஆழமான, தேசிய நலன் மீதான அக்கறை கொண்ட சிந்தனையின்பாற்பட்ட ஒன்றென்றே கூற வேண்டும். கடந்த இரு தசாப்த காலமாக பேரழிவையும், பேரிழப்புக் களையும் ஏற்படுத்திய இனப்பிரச்சினையை இராணுவரீதியில் ஒடுக்க முன்னெடுக்கப்பட்ட யுத்தஅணுகுமுறையானது பெரும் தோல்வியையும், பின்னடைவுகளையும் சந்தித்து இனிமேலும் அதன் தாக்கத்தை எதிர்கொள்ளும் சாத்தியக் கூறுகள் எதுவும் இல் லாத நிலையில், சமாதானத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியமானது விருப்பமற்ற நிலையிலும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது எனலாம்.

இந்தச் சமாதான முயற்சிகள் கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் சர்வதேச ஆதரவுடனும், நோர்வே அரசின அனுசரணையுடனும் முன்னெடுக்கப்படத் தொடங்கியபோது அமைதித் தீர்வு குறித்து ஏற்பட்ட உலகளாவிய ரீதியிலான நம்பிக்கை யானது - பேச்சுவார்த்தைகள் கட்டம் கட்டமாக நகர்த்தப்பட்ட போது மெல்ல மெல்லத் தளரத் தொடங்கியது. இதற்கு பேச்சுவார்த்தையை நடைமுறைப்படுத்தத் தொடங்கிய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எந்தவொரு விடயத்திலும் தீர்க்கமானதோர் முடிவை நாட்டின் நன்மை கருதியேனும் சுயாதீனமாக எடுக்கும் அதிகார பலம் இருக்கவில்லை என்பதே பேச்சுவார்த்தையின் ஆரம்பப் பலவீனமாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பலவீனமே பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட போதும், அதில் எந்தவிதமான நம்பிக்கைதரும் சமிக்ஞை எதுவும் தென்படாமல் போனமைக்குக காரணமாகும்.

அத்துடன் அதிகார பலம் கொண்டவரும், சர்வ வல்லமை கொண்ட ஜனாதிபதியுமான சந்திரிகா அந்தச் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளை பல்வேறு வகைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்த்து வந்ததுடன் அதற்கு எந்த வகையிலும் ஆதரவு வழங்கவோ, அனுசரணையாக இருக்கவோ மனமற்றவராக இருந்தார்.

ஜனாதிபதி தலைமையில் ஒரு வகையான ஆட்சியும், ரணில் தலைமையில் இன்னொரு விதமான ஆட்சியுமாக இலங்கை இரட்டை ஆட்சியின் கீழ் அல்லாடிக் கொண்டிருந்த வேளையில். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மற்றும் யுத்த நிறுத்த உடன் பாட்டின் அடிப்படையில் மட்டும் சமாதானச் சூழல் இன்று வரை பேணப்படும் ஒன்றாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடைசியாக இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான தமது யோசனைகள் அடங்கிய அறிக்கை ஆவணத்தை விடுதலைப்புலிகள் ரணில் தலைமையிலான அரசிடம் கையளித்ததும் - ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகார சக்தியைப் பயன்படுத்தி ஆட்சியைத் திடீரென்று கலைத்தபோதும் சமாதானச் சூழல் குழம்பவில்லை என்றால் அதற்கு விடுதலைப் புலிகளின் பொறுமையும், சமாதானத்தை முன்னெடுப்பதில் அவர்களுக்கிருந்த ஆர்வமும் சர்வதேச சமூகம் மீது அவர்களு கிருந்த நம்பிக்கையுமே காரணமாகும்.

புதிதாக அமைந்த அரசும், அதனை அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள கூட்டுக் கட்சிகளும் சமாதானத்தை பகிரங்கமாகவே எதிர்ப்பவை என்பதும், இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்த யோசனைகளை முற்றாக நிராகரிப்பவையென்பதும் வெளிப்படையான விடயமேயாகும்.

இந்த நிலையில் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு முயற்சி தொடர்பாக அரசில் உட்கட்சி முரண்பாடுகள் வலுத்துள்ள நிலையில் ஜனாதிபதி பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பவராகியுள்ளார்.

பேச்சுவார்த்தையை முன்னெடுக்காமல் சர்வதேச நிதியுத விகளை, கடன்களைப் பெறமுடியாத நிலையில் அவர் இடைக்கால நிர்வாக அதிகாரசபைக்கு மாற்றீடாக இடைக்கால நிர்வாக அலகொன்றினை உருவாக்கும் புதிய திட்டமொன்றில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் - அதன் அடிப்படையில் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க சர்வதேச சமூகத்தின் உதவியை கோரவிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் தென்பகுதி சிவில் சமூக அமைப்பின் கோரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வு காண 70 சதவீதமான மக்கள் ஆதரவைத் தெரிவித்திருப் பதாகக் கூறும் அந்த அமைப்பினர் வெறுமனே 10 சதவீதமானவரே சமஷ்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்ததுடன் - இந்த வகையில் பார்த்தால் விடுதலைப் புலிகள் தெரிவித்த யோசனைகளின்அடிப்படையில் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதே அர்த்தமுள்ளதாக இருக்குமென்றும் வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால், எப்போதுமே நியாயமானதும், அவசியமானதும், சாத்தியமானதுமான எந்த ஆரேக்கியமான ஆலோசனைகளையும - ஜனாதிபதியும் அவரது தலைமையிலான அரசும், இனப் பிரச்சினை தொடர்பான, சமாதான முன்னெடுப்புகள், தொடர்பான எந்த விடயத்தையும கருத்தில் கொண்டதாக வரலாறே கிடையாது.

எல்லாப் பொது நியாயங்களுக்கும் முரணாக சுய நியாயப் படுத்துதல்களை வலியுறுத்த முயலும் ஜனாதிபதிக்கு சிவில் சமூகத்தவரின் கருத்து ஏற்றுக் கொள்ள முடியாதவொன் றாகவே இருக்கும். அவர் சமாதானத்தை இழுத்தடிக்கவே விரும்புகிறார்... நிரந்தரமாக்கவோ, உறுதிப்படுத்தவோ விரும்பவில்லை என்பதே உண்மையாகும்.

## நாடும் நடப்பும்




# தமிழர்கள் ஒன்றுபடுவதன் மூலம்தான் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும்!

## குமார் பொன்னம்பலம் நினைவுக் கூட்டத்தில் மாவை

சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற இந்தக் காலப்பகுதியல் தமிழ்மக்களாகிய நாம் விழிப்புடனும், தேசப் பற்றுடனும் இருக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 66ஆவது பிறந்தநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் - தமிழ் மக்கள் அடக்கப்பட்டு, ஒடுக்கபபட்டபோது அகிம்சை ரீதியாக போராடினார்கள். இதனை சிங்கள தேசம் பொருட்படுத்தவில்லை. இதன் பின்னர்தான் ஆயுதரீதியான போராட்டம் பல அமைப்புக்களால் முன்னெடுக் கப்பட்டது.

இதில் வளர்ச்சிகண்டுள்ள தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி யான அமைப்பே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு. தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்று உருவாவதற்கு அத்திவாரமிட்ட வர் குமார் பொன்னம்பலம்தான். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ்மக்கள் பெருமளவில் எமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும்.

குறிப்பாக சமாதான காலப்பகுதியில் நாம் விழிப்பாக இருக்கவேண்டும். தமிழ்மக்கள் ஒன்றுபடவேண்டும். ஒருமித்துச் செயற்படவேண்டும். இவ்வாறு செயற்படுவதன் மூலம்தான் நாம் ஜனநாயகத்தை நிலைநாட்டமுடியும்.

ஜனநாயகத்தை நிலை நாட்டுவதன் மூலம்தான், தமிழீழ விடுதலைப்புலிகள் பலமடைவார்கள். இவ்வாறு பலமடையும்போது எம்மைநாமே ஆளும், எம்மைநாமே ஆட்சிசெய்யும் காலம் ஒன்று உருவாகும் எனத் தெரிவித்தார். (தீ,31)

## ஊழியர் உரிமை மீறப்பட்டதா? பல்கலையில் இன்று விசாரணை

யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞரின் உரிமை மீறப்பட் டதா என ஆராயும் விசேட விசாரணை இன்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை யாழ்.பல்கலைக்கழக எழுது வினைஞர் ஒருவர், தன்னுடன் பணியாற்றும் இருபெண் ஊழியர் கள் தனது அடிப்படை உரிமைகளை மீறும்வகையிலும், தனது கடமைக்கு இடையூறான வகையிலும் செயற்படுவதாகத் தெரி வித்து பல்கலைக்கழக அறையொன்றினுள் தற்கொலை முயற்சி யில் ஈடுபட்டார்.

எனினும், சக ஊழியர்களால் அவர் காப்பாற்றப்பட்டார். இது தொடர்பான விசாரணையை நடத்தவென யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம், விரிவுரையாளர்கள் மூவரைக்கொண்ட குழுவொன்றை நியமித்திருந்தது. அந்தக்குழு இன்று தனது விசாரணைகளை நடத்தவுள்ளது. இந்த விசாரணையின் பிரகாரம் அவரது சக ஊழியர்கள் குற்றமிழைத்திருப்பின் தகுந்த தண்டனைகள் வழங கப்படும் எனவும் யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரி வித்தன. (ப)

## சங்கீதசபை நடத்திய பரீட்சையில் 4800 பேர் சித்தியடைந்தனர்

வட இலங்கை சங்கீத சபையால் நடத்தப்பட்ட நுண்கலைப் பரீட்சையில் நான்காயிரத்து எண்ணூறு பேர்வரையில் சித்தி யடைந்திருப்பதாக வட இலங்கை சங்கீத சபையினர் அறிவித் துள்ளனர்.

கடந்த ஏப்ரல், யூன் மாதங்களில் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்ப டையிலான பரீட்சைக்குத் தோற்றிய 6ஆயிரத்து நூறு பேரில் 4 ஆயிரத்து எண்ணூறு பேர் சித்தியடைந்துள்ளனர்.

இந்தத் தொகை தோற்றியவர்களின் எண்ணிக்கையில் எண்பது வீதமாகும். கடந்தகாலங்களிலும் பார்க்க அதி கூடிய மாணவர்கள் இந்தமுறை பரீட்சைக்குத் தோற்றியுள்ள துடன் சித்தியெய்தியும் உள்ளனர்.

சங்கதம், நடனம், மிருதங்கம், பண்ணிசை நாடகமும் அரங்கி யல் முதலான நுண்கலைப்பாடங்களுக்கான 2004 ஆம் ஆண டுக்கான பரீட்சைப் பெறுபேறுகளின்படியே இந்தத் தொகை யினர் சித்தியடைந்திருக்கின்றனர். பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான பெறுபேறுகள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ப)

## தமிழகத்திலிருந்து வந்தவர்களுடன் யுனிசெவ் பிரதிநிதிகள் சந்திப்பு!

இந்திய அகதிமுகாம்களில் தங்கியிருந்து கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதிக்குப் பின்னர் நெடுந்தீவுப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களைச் சந்திக்கும் நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி நெடுந்தீவில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி இவ்வாறு மீளக்குடியமர்ந்தவர் களது வாழ்விடங்களுக்குச்சென்று, அவர்களது நிலைமை தொடர்பாக நேரில் ஆராயப்படவுள்ளதுடன், மறுநாள் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபை பொது நூலக மண்டபத்தில், குறிப்பிட்ட ஏப்ரல் 15 இற் குப் பின்னர் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான ஒன்றுகூடல் இடம் பெறவுள்ளது. இந்த ஒன்றுகூடலில் மக்களின் தொழில் ரீதி யான தேவைகள், மருத்துவ ஆலோசனைகள், நிர்வாகக் கட்டு மானம் எனபன தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளதுடன், கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகள், யுனி செவ் பிரதிநிதிகளால் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (113)

## போரூட் வீடுகளில் குடியமர மறுப்பு!

நாரந்தனை தெற்கு யா/58 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்குப் போரூட் நிறுவனத்தால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளில் மக்கள் குடியமரமறுத்துவருகின்றனர்.

வீட்டு வேலைகள் சரிவர முடிக்கப்படாமையாலும், அந்த வீடுகள் குறுக்குக் கடலை அண்டிய பள்ளக்காணிகளில் அமைக கப்பட்டதுடன, எல்லா வீடுகளுக்கும் மண் சரிவர நிரப்பப்படாமை யாலும், இந்த மக்கள் குடியேறி மாரிகாலத்தில் பெரும் அவஸ் தைக்கு உள்ளாக வேண்டும் என்பதால், அங்கு குடியேற மறுத்துவருகின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவன த்தில் எடுத்துப் பொறுப்புணர்வுடன் நடந்து, அந்த வேலைகள் யாவற்றையும் நிறைவேற்றிக்கொடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது. (51)

## 5.3 மில்லியன் ரூபா செலவில் நீர் விநியோகத் திட்டங்கள்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 5.3 மில்லி யன் ரூபா செலவில் இரண்டு சிறிய நீர்விநியோகத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் தண்ணீர்ப் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு, ஏற்கனவே மூன்று சிறிய நீர்விநியோகத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், புதிதாக இரு சிறிய நீர்விநி யோகத் திட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்துக்கு அருகாமையி லும், பொம்மைவெளிப் பிரதேசத்திலும் இந்தத் திட்டத்தின் முதற்கட்டவேலைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் 800 இற்கும் அதிகமான குடும்பங்கள் நன்மைய டையக்கூடியதாகவிருக்கும் என யாழ்.மாநகரசபையின் பொதுச் சுகாதாரப்பகுதிப் பொறியியற்துறை அதிகாரி நவரட்ணராஜா தெரிவித்தார். (கு)

# இவ்வார பலன்கள் 13-08-2004 19-08-2004

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சந், சுக் சனி |
| யுரே | 13 இ 9.26 கட. சந்<br>16 கா 8-10 சிங் - சந் | | சூ |
| நெப் | 16 மா 5-18 சிங் - சூரி<br>18 மா 4-53 சிங்க - சந் | | செவ்,புத குரு |
| | | கேது | |

## மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகள் நன்றாக இருக்கும். ஒருவருக்கொருவர் பரிந்துணர்வுடன் நடந்துகொள்வர். வீட்டில் சந்தோஷமான நிகழ்வுகள் ஏற்படலாம். பிற நாட்டிலிருந்து பொருள் வரவு கிடைக்கும். வருமானம் சிறப்பாக இருக்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. திருமண நிகழ்வுகள் மகிழ்ச்சியைத் தரும். தனித்தொழில் செய்வோர் கூடிய லாபம் பெறுவர். உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணி[illegible]வர். அதிகாரிகளின் ஒத்துழைப்பு உண்டு. சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். வங்கி உதவிகளும் கிட்டும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமும், முயற்சியும் உடையவராகக் காணப்படுவர். முன்னேற்றம் கிட்டும்.

## இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம்பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனி பிற்பகுதி நடக்கிறது. குடும்ப அங்கத்தவர்களிடையே சிறு வாக்குவாதங்கள் தோன்றும். உறவினர்களால் சிறு பிரச்சினைகள் உருவாகும். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். நாளாந்த வருமானம் குறையும். குடும்பச் செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். திருமணப் பேச்சுக்களில் இழுபறிநிலை தோன்றும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். உத்தியோகத்தர்களுக்கு வேலைக் கடினம் ஏற்படும். ஒத்துழைப்புகள் குறைவாகவே இருக்கும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிடையாது. கொடுக்கல், வாங்கல்களில் நிதானம் தேவை. மாணவர்களின் கல்வியில் மந்தநிலை காட்டும்.

## மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம்பாதங்கள்)*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமை வலுக்கும். இனத்தவர்கள், அயலவர்கள் ஒத்தாசை புரிவர். பண வருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். எனினும் ஆடம்பரங்களைக் குறைத்துக்கொள்வது நன்று. தேகாரோக்கியம் பாதிப்படையாது. பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் மேல் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு தத்தமது பணிகள் சிறப்பாக நடக்கும். சகதொழிலாளர்களின் உதவி உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பங்குதாரர்கள் ஒத்துழைப்பர். தொழில் சம்பந்தமாக பிரயாணங்கள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் நாட்டமுடையவராகக் காணப்படுவர். முன்னேற்றமுண்டு.

## கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இடையிடையே சிறு பிணக்குகள் தோன்றி மறையும். பிரயாணங்களில் அலைச்சல்கள் தென்படும். உறவினர்களுக்குள் கசப்புணர்வுகள் தோன்றும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படக்கூடும். வருவாய்க்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். எதிலும் அவதானந்தேவை. திருமணப் பேச்சுக்கள் காலந்தாழ்த்தும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத நெருக்கடிகள் தோன்றும். அதிகாரிகளுக்கு இயைவாக நடந்துகொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு முயற்சிக்கேற்ப லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளைப் பொறுத்துச் செய்யவும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் சிறு தடைகள் தோன்றலாம். முன்னேற்றத்துக்குக் கடும்முயற்சி தேவை.

## சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியினருக்கும் குடும்ப உறவுகள் சீராக இருக்கும் .புத்திரர்களால் உதவி உண்டு. பெரியவர்களின் ஆசியும், அன்பும் கிடைக்கும். தொழில் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும், நல்ல வருவாய் கிடைக்கும். இனபந்துக்களுடன் ஒற்றுமை வலுப்படும். தேகாரோக்கியம் பாதிப்படையாமல் இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்சியுடன் காணப்படுவர். பிள்ளைகளால் உதவி உண்டு. திருமணப் பேச்சுக்கள் திருப்தியான முடிவைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு பலவகையாலும் உதவி கிடைக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பு நலகுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்புற நடக்கும். போதிய லாபம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் ஏற்படும்.

## கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசிக்காரருக்கு குடும்பத்தில் அடிக்கடி சிறு சச்சரவுகள் தோன்றும். சகோதரர்கள், புத்திரர்களால் கவலை உண்டாகும். திடீர்ச் செலவுகள் ஏற்படுவதால், வருமானம் பற்றாக்குறை ஏற்படும். தேகாரோக்கியம் சீராக இருக்காது. குடும்பப் பெண்கள் திதானத்துடன் நடந்துகொள்வது நன்று. திருமணப் பேச்சுக்கள் காலவரையின்றி நீண்டுகொண்டு போகும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் விருப்பத்திற்கேற்ப நடந்துகொள்வது நன்று அல்லது அவப்பெயருக்கு ஆளாக நேரிடும். ஒத்துழைப்புக்கள் குறையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாக இருக்கும். குரு 12இல் சஞ்சரிப்பதால் பொருள்வரவு குறையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

## துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள் சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன், மனைவியிடையே அந்நியோன்ய உறவு வலுக்கும். சகோதரர்களால் உதவி உண்டு. வீட்டில் நற்கருமங்கள் நடைபெறலாம். தேகாரோக்கியம் சிறிது பாதித்தாலும் உடனுக்குடன் சுகம் ஏற்படும். பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். திருமணப் பேச்சுக்கள் நல்ல பலனைத் தரும். உத்தியோகத்தர்கள் கௌரவத்துடன் பணியாற்றுவர். சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். பழைய கடன்கள் வசூலாகும். வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் காட்டுவர். பரீட்சைகள் அனுகூலமாக அமையும்.

## விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசிக்காரருக்கு குடும்பத்தில் சிறு குழப்பங்கள் ஏற்படலாம். கணவன், மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். பணவரவு மட்டாக இருக்கும். நண்பர்கள், இனபந்துக்களாலும் சில துன்பங்கள் ஏற்படலாம். குடும்பப் பெண்கள் ஆடம்பரங்களைக் குறைத்துக் கொள்ளவும். தேகசுகத்தைக் கவனிக்கவும், பிரயாணங்களில் தடை தாமதங்கள் காட்டும். விவாகப் பேச்சுக்களில் இழுபறிநிலை ஏற்படும். உத்தியோகத்தர்களுக்குத் தமது பணிகளில் கூடிய அக்கறை தேவை. வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக இருக்கும். மாணவர்கள் நிம்மதி குறைந்து காணப்படுவர்.

## தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசுராசியினருக்கு குடும்ப உறவு வளர்ச்சி காணும். உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில் மூலம் வருவாய் அதிகமாகும். தேகசுகம் நன்கு அமையும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியால் திளைப்பர். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். திருமணப் பேச்சுக்கள் விரைவான நல்ல பலனைத் தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். உத்தியோகத்தர்கள் சிறப்படைவார்கள். அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். தொழில் சம்பந்தமாக வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சியடைவர். ஞாபகசக்தி புத்திக் கூர்மை சிறப்பாக அமையும்.

## மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசியில் பிறந்தவர்களுக்கு அட்டமத்து வியாழன் நடப்பதால், குடும்பத்தில் சிறு சச்சரவுகள் தோன்றலாம். சகோதரர்களால் தொல்லைகள் ஏற்படும். தொடங்கும் காரியங்களில் தடை, தாமதம் காட்டும். வருவாய் கணிசமான அளவு இருப்பினும் செலவு அதிகமாகும். தேகசுகக் குறைவால் வைத்தியச் செலவுகளும் தவிர்க்கமுடியாமலிருக்கும். திருமணப் பேச்சுக்கள் தாமதம் காணும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். உயர்ச்சிகள் தாமதமடையும். மாணவர்கள் கல்வியை முன்னேற்ற முயற்சிக்க வேண்டும்.

## கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகள் சீராக அமையும். இல்லற வாழ்வில் நிம்மதி உண்டு. பணவருவாய் திருப்தியளிக்கும் புத்திரர்களால் பெருமை சேரும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. காதல் விவகாரங்கள் வெற்றியளிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். ஆடை நகை வியாபாரத்தில் நிறைந்த லாபம் கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு தமது விருப்பங்கள் நிறைவு பெறும். சகாக்களின் உதவி கிடைக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு உண்டு. மாணவர்கள் முன்னேற்றமடைவர். உயர் கல்வி வாய்ப்புக் கிடைக்கும்.

## மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசிக்காரர்களுக்கு குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றும். மன நிம்மதி குறையும். உறவினர்களால் தொல்லைகள் ஏற்படும். குடும்பத்தில் வீண்செலவுகள் அதிகரித்துக் காணப்படும். தேகாரோக்கியம் குறைந்து காணப்படும். குடும்பப் பெண்கள் விரக்தியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் கொடுக்கும். உத்தியோக த்தர்கள் தமது பணிகளை ஆற்றுவதில் இடையூறுகள் ஏற்படும். சக ஊழியர்களாலும் தொல்லை தோன்றும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்தநிலை தோன்றும். கடன் வியாபாரங்களைத் தவிர்க்கவும். புதிய முதலீடுகளை ஆறுதலாகச் செய்யவும். மாணவர்கள் குழப்பமடைவர். வாக்குவாதங்களும் ஏற்படும்.

---

வணிகன்

# பொருட்களுக்கான விலையிடல் தொடர்பான விடயங்கள்

### விலையிடல்

பல் நிறுவனங்கள் தமது பொருட்கள், சேவைகளை ஓர் விடயமாக விலையிடல் காணப்படுகின்றது. எனவே, விலையிடல் தொடர்பான விடயங்கள் இந்தப் பகுதியில் ஆராயப்படுகின்றது.

01. சூழல் காரணி
02. உளவியற் காரணி
03. விலை நெகிழ்ச்சி

இவை மூன்றும் நுகர்வோரது கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஆகும். அதாவது, நுகர்வோரது மனநிலை, விருப்பு, வெறுப்புக்களை மாற்றத்தை ஏற்படுத்தல் கூடியன. எனவே, அவற்றைத் தனித்தனியே பார்ப்பது அவசியமாகக் காணப்படுகின்றது.

### 01. சூழல் காரணிகள்

சூழற் காரணியே விலையிடல் தீர்மானத்தில் முக்கிய இடம்பெறுகின்றது. ஏனெனில், சமூகத்தவரின் வருமானம், நுகர்வோரின் அமைவிடம். நுகர்வோரின் பொருளாதார நிலை என்பவற்றைக் கொண்டே விலையிடல் அவசியமானது.

### 02. உளவியற் காரணிகள்

இது விலையிடல் தொடர்பான நுகர்வோர் எவ்வாறு நோக்குவார் என்பதிலேயே தங்கியுள்ளது. அதாவது -

1. தரமானது விலையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றதா? விலை கூடியது தரம் கூடியது அல்லது விலைகுறைந்தது தரம் குறைந்தது என கருதுகின்றனரா.

2. தமது தேவைகளுடன் ஒப்பீட்டு விலை அதிகம் என கருதும் மனப்பான்மை கொண்டவரா?

3. குறித்த பொருளுக்காக நுகர்வோர் செலுத்த விரும்பும் விலை?

இவற்றுக்கு விடை காண்பதனுடாக உளவியல் காரணி தீர்மானிக்கப்படுகின்றது.

### 3. விலை நெகிழ்ச்சி

விலையானது மாற்றமடையும் போது எவ்வளவாய் கேள்வித்தொகை மாற்றமடையும் என குறிப்பிடுவதே ஆகும். இது தரவுகளின் அடிப்படையிலேயே மதிப்பீட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

இதுவரை கேள்வியானது விலையில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பற்றியே ஆராயப்பட்டது. அது போல நிரம்பலும் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது.

விலையிடல் தீர்மானத்தில் நிரம்பலின் தாக்கமாக

01. நிறுவன குறிக்கோள்
02. உற்பத்திச் செலவு
03. உற்பத்தியியல்பு

என்பவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

### 01. நிறுவன குறிக்கோள்

I. விலையின் பால் நுகர்வோரை உணர்வூட்டல்
II. சந்தையின் பங்கு.
III. நீண்ட கால உச்சலாபம்.
IV. குறுங்கால உச்சலாபம்.
V. சந்தையின் உறுதித் தன்மை.

போன்றவை விலையிடலின் நிறுவனத்தின் குறிக்கோளாகக் காணப்படுகின்றது.

### 02. உற்பத்திச் செலவு கருதிய விலையிடல்

இதற்கு முன் விலையானது எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பதை நோக்குவோமாயின், விலையானது உற்பத்திச் செலவு, நிலையான செலவு மற்றும் குறிப்பிட்ட வீத இலாபத்தையும் கொண்டே விலையானது தீர்மானிக்கப்படுகின்றது.

இனி உற்பத்திச் செலவு கருதிய விலையிடலினை மூன்று அடிப்படையில் பிரித்து நோக்கலாம்.

### குறித்த விலையிடல்

இது பண்டத்தின் தன்மை சூழல் என்பவற்றைப் பொறுத்து குறித்த பொருளுக்கான விலை தீர்மானிக்கப்படும் இது சில்லறை வியாபாரியினால் ஒரு வீதத்திலும் மொத்த வியாபாரியினால் பிறிதொரு இலாப வீதத்திலும் விலையானது கணிக்கப்படும்.

### 2.2) செலவு சேர்ந்த விலையிடல்

உற்பத்திச் செலவுடன் பொருள் விற்பனை இலாபமாக குறிப்பிட்ட வீதம் சேர்க்கப்பட்டு விலையானது மேற்கொள்ளப்படுமாயின் அது செலவு சேர்ந்த விலையிடல் ஆகும்.

### 2.3) திரும்பல் வீத விலையிடல்

இது பரும்படி உற்பத்தி முறையில் பயன்படுத்தப்படுகின்றது. இதன்படி செலவுக்கான முதலீடு மீது விருப்பமான திரும்பல் வீதம் ஒன்றைச் சேர்ப்பதன் மூலம் விலையிடல் தீர்மானிக்கப்படும்.

### 03. உற்பத்தியின் இயல்பின் அடிப்படையில் விலையிடல்

இயல்பின் அடிப்படையில் விலையிடலானது மூன்று காரணிகளிலேயே முக்கியமாகத் தீர்மானிக்கப்படுகின்றது.

1. விரயமாகும் தன்மை.
2. பிரித்தறியும் தன்மை.
3. உற்பத்திப் பொருளொன்றின் வாழ்க்கை வட்டம்.

### 3.1) விரயமாகும் தன்மை

பௌதீக ரீதியாக அழிவடையும் தன்மை கொண்ட பொருட்கள் விரைவாக விற்பனை செய்யப்படுவதற்காக விலை இடப்படவேண்டும். இதன்படி உணவுப் பொருட்கள் மூலப்பொருட்கள் இவ்வாறே விலையிடப்படும்.

### 3.2) பிரித்தறியும் தன்மை

பதிலீட்டுத் தன்மை கொண்ட பொருட்களில் இருந்து பிரித்து அறிய உதவுபவையாக இது காணப்படுகின்றது. இதன்படி பொருளின் விலை, தரம் போன்றவற்றை மாற்றி நுகர்வோரை கவரக்கூடியதாக விலையிடலானது இடப்படும்.

### 3.3) உற்பத்திப் பொருள் ஒன்றின் வாழ்க்கை வட்டம்

பொருளுக்கான விலையிடல் வட்டத்தின் அடிப்படையில் இரண்டு அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது.

1. அதியுயர் விலையிடல் கொள்கை.
2. ஊடுருவல் விலையிடல் கொள்கை.

### அதியுயர் விலையிடல் கொள்கை

இது போட்டி நிறுவனங்கள் இல்லாது தனியுரிமைச் சந்தை காணப்படும் போதும், பதிலீட்டுப் பொருட்கள் இல்லாத போதும் இது சாதகமாக காணப்படும். பின்பு போட்டி நிறுவனங்கள் உட்புக விலையானது குறைவடைவதாக காணப்படும்.

### ஊடுருவல் விலையிடல் கொள்கை

இங்கு போட்டி அதிகமாகக் காணப்படுவதால், பொருளுக்கான விலையைக் குறைத்து, பொருளுக்கான விற்பனை அதிகரிப்பதன் ஊடாக இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## துருக்கியில் இரண்டு ரயில்கள்

# நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 6 பயணிகள் பலி; 70 பேர் காயம்!



துருக்கியில் இரண்டு ரயில்கள் ஒன்றுக்கொன்று நேருக்கு நேரே மோதிக் கொண்டதில் ஏற்பட்ட விபத்தில் ஆறு பயணிகள் உயிரிழந்ததுடன் 70 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஒருமாத காலத்துக்குள் துருக்கியில் நடந்த மூன்றாவது ரயில் விபத்து இதுவாகும்.

அங்காராவிலிருந்து இஸ்தான்புல் நோக்கி ஒரு ரயில் பயணத்தை மேற்கொண்டிருந்ததாகவும், மற்றயது இஸ்தான்புல்லிலிருந்து அடப்பசாரி நோக்கிச்சென்று கொண்டிருந்ததாகவும், அந்த வேளையில், இரண்டு ரயில்களும் ஒரே பாதையில் நேருக்கு நேரே மோதிக்கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புக்குழு சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றுள்ளது. உயிரிழந்தவர்களின் உடல்கள் ரயில்களில் சிக்கியுள்ளதாகவும், அவை இன்னமும் மீட்கப்படவில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மற்றும் உயிரிழந்தவர்கள் தொடர்பாகச் சரியான தகவல்களை வழங்க முடியாமைக்கு, அங்கு மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெறுவதே காரணமெனவும், காயமடைந்தவர்களில் 22 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரெனவும் துருக்கியின் போக்குவரத்து அமைச்சர் பினாலி ஜில்றிம் தெரிவித்தார்.

விபத்தில் சிக்கிய ஒரு ரயில் சிவப்பு விளக்கு சமிக்ஞையைக் கவனியாது சென்றதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக துருக்கி ரயில்வே அதிகாரசபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தவிபத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் ரயில்வே ஊழியர்களெனவும் அவர் தெரிவித்தார்.

அங்காராவிலிருந்து - இஸ்தான்புல்நோக்கிச் சென்ற ரயிலில் 153 பயணிகளும், ஒன்பது ரயில்வே ஊழியர்களும் பயணம் செய்தனர். மற்றய ரயிலில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்பது உடனடியாகத் தெரியவரவில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி துருக்கியின் மேற்குப்பகுதியில் ரயிலொன்று பஸ்ஸுடன் மோதியதில் 15 பேர் உயிரிழந்தனர்.

. மேலும், ஜூலை மாதம் 22 ஆம் திகதி துருக்கியில் அறிமுகப்படுத்தப்பட்ட அதிவேக ரயில் வடமேற்குப் பகுதியில் விபத்துக்குள்ளானதில் 37 பேர் உயிரிழந்தனர்.

ரயில் போக்குவரத்தை மேம்படுத்த ஒதுக்கப்படும் நிதியில் வெட்டு, ரயில் போக்குவரத்துக்கான பாதுகாப்பு பின்தங்கியிருந்தமை போன்ற காரணங்களால் துருக்கியில் அடிக்கடி ஏற்படும் ரயில் விபத்துக்களையடுத்து துருக்கியின் ரயில்வே அமைச்சரை ராஜினாமாச் செய்யக் கோரப்படலாமென பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.




## மாவோ கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக நேபாள படையினர் தொடர் தாக்குதல்!

நேபாளத்திலுள்ள மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக அந்த நாட்டுப் படையினர் மூன்றாவது நாளாகவும் தாக்குதல்களை நடத்தி வந்தாலும், இந்தத் தாக்குதல்கள் குறித்த இழப்புக்கள் எதுவும் வெளிவரவில்லை.

மாவோயிஸ்ட்டுக்களின் பலமான கோட்டைகள் எனக் கருதப்படும் இரண்டு கிராமங்கள் மீதே இந்தத் தாக்குதல்களை படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளை நெருக்கடிக்குள் தள்ளி அவர்களைச் சரணடையச் செய்வதற்கே ஆரம்பிக்கப்பட்டதென நேபாள இராணுவப் பேச்சாளர் தெரிவீத்தார்.

இந்த இரண்டு கிராமங்களில் வாழும் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புத் தேடிக்கொள்ளுமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவோயிஸ்ட் கிளாச்சிவாதிகளின் பிரதான



தலைவர் பி.பி.ஸிக்குத் தெரிவிக்கையில் - தமது போராளிகள் யுத்தத்துக்கான முழுத்தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும், இது படையினருடனான நேரடியான மோதல்களுக்கோ அல்லது வேறு இழப்புக்களுக்கோ அல்லவெனவும் அவர் தெரிவித்தார்.

மாவோ கிளர்ச்சிவாதிகள் நேபாளத்தின் வேறு நகரங்களில் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கும் நோக்குடனேயே அரச படையினர் அவர்களுக்கெதிரான இந்தத்தாக்குதலை ஆரம்பித்ததாக காத்மண்டுவிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

# குழந்தையின் வயிற்றுக்குள் குழந்தை சத்திர சிகிச்சை மூலம் எடுக்கப்பட்டது

## தமிழ்நாடு சிவகங்கையில் சம்பவம்

பிறந்து இரண்டு மாதங்களேயான குழந்தையின் வயிற்றுக்குள் இருந்த சிசுவை டாக்டர்கள் இரண்டு மணிநேர சத்திரசிகிச்சையின் பின்னர் அகற்றினர்.

தமிழ்நாடு சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை பகுதியைச் சேர்ந்தவர் ஆனந்தன். இவரது மனைவி சாந்தி.

அவருக்கு கடந்த மே மாதம் 4 ஆம் திகதி காரைக்குடியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது.

குழந்தை பிறந்தது முதல் அழுதுகொண்டே இருந்தது. இதனால், கவலை அடைந்த பெற்றோர் தங்களுடைய குழந்தையைக் காரைக்குடியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

அப்போது குழந்தையின் வயிற்றுக்குள் கட்டி இருப்பதை டாக்டர்கள் கண்டுபிடித்தனர். உடனே அவர்கள் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்றால், சிகிச்சைக்கு மதுரைக்குக் கொண்டு செல்லும்படி கூறினர்.

அதன்படி அவர்கள் குழந்தையை மதுரையிலுள்ள குழந்தைகள் நல மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். உடனே டாக்டர் குமார் வெங்கடேசன் குழந்தையின் வயிற்றுப்பகுதியை எக்ஸ்ரே எடுத்துப்பார்த்தார். குழந்தையின் வயிற்றுக்குள் இருந்த கட்டியில் சிறிய அளவில் எலும்புகள் தெரிந்தது. இதனால், சந்தேகம் அடைந்த டாக்டர் குழந்தையின் வயிற்றில் இருந்த கட்டியை ஸ்கான் எடுத்துப் பார்த்தார். அப்போது அந்தக் கட்டியில் இன்னொரு சிசு உருவாகுவதற்கான கரு இருப்பதை கண்டு பிடித்தனர்.

3 டாக்டர்கள் அடங்கிய குழுவினர் சுமார் 2 மணிநேரம் சத்திர சிகிச்சை செய்து குழந்தையின் வயிற்றுப்பகுதியில் இருந்த கருவை வெளியே எடுத்தனர்.

அந்தக் கரு 1 கிலோ எடை கொண்டதாக இருந்தது. அதில் உட்புறத்தில் சிசுவின் முகம், கண், காது, கைகள், கால்கள் போன்ற உறுப்புக்களின் வடிவம் தெரிந்தது. சிகிச்சைக்குப் பிறகு குழந்தை நலமாகவுள்ளது.

பின்னர், இது குறித்து டாக்டர் குமார் வெங்கடேசன் நிருபர்களிடம் கூறியதாவது-

பத்து லட்சத்தில் ஒரு குழந்தைக்கு இது போன்று கரு உருவாக வாய்ப்பு உள்ளது. இதற்குக் காரணம் சிலருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்ற வாய்ப்பு உள்ளபோது, ஒரு குழந்தை மட்டுமே பிறக்கும். அப்போது இன்னொரு குழந்தையின் கரு வயிற்றுக்குள் தங்கிவிட வாய்ப்புள்ளது. அது மிகவும் அரிதாக நடக்கின்ற அற்புதமான, அபூர்வமானதாகும் என்றார்.

# பலஸ்தீனர்களின் ஆறு வீடுகள் இஸ்ரேல் இராணுவத்தால் அழிப்பு

(காஸா)

காஸாவின் ரபா அகதிமுகாம் பகுதியில் அமைந்துள்ள வீடுகளை இஸ்ரேல் படையினர் இடித்து தரை மட்டமாக்கியுள்ளனர்.

குறித்த பகுதிக்குச் சென்ற இஸ்ரேலிய இராணுவப் புல்டோசர்கள் அங்கிருந்த வீடுகளை இடித்து தரை மட்டமாக்கியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வீடழிப்பு நடவடிக்கையை உறுதிப்படுத்திய இஸ்ரேல் இராணுவம் இவை பொதுமக்களால் பாவிக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் இருந்ததாகவும், இதனைப்பயன்படுத்தி இஸ்லாமிய ஆயுதக்குழுவினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதாகவும், இதன் காரணத்தாலேயே இந்த வீடுகள் அழிக்கப்பட்டன எனவும் தெரிவித்தனர்.

இஸ்ரேல் இராணுவ புல்டோசர்கள் வீடுகளை அழித்துக்கொண்டிருக்கையில், இஸ்ரேலிய இராணுவ ஹெலிகொப்ரர்கள் அப்பகுதி மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இஸ்ரேல் இராணுவத்தால் ஆறு வீடுகள் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேமாதிரியான ஒரு நடவடிக்கை நேற்று முன்தினம் கான் யூனுஸ் அகதிமுகாம் பகுதியிலும் இடம்பெற்றதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.1984 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை

### பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்.

| | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | காங்கேசன்துறை | 14-08-2004<br>15-08-2004 | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| 02 | பளை | 21-08-2004<br>22-08-2004 | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| 03 | ஊர்காவற்துறை | 11-09-2004<br>12-09-2004<br>13-09-2004<br>14-09-2004 | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

எமது காங்கேசன்துறை கிளையின் மல்லாகம் நீடித்த கரும பீடத்தில் அடகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அந்தப் பிரதேச மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பிரதேச முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-2928)



நிறஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், விஜயலஷ்மி, செந்தில் நடித்த

நேதாஜி

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

past Perfect

(சி-2723)



நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த




தினசரி காட்சிகள் 11.00, 3.00, 7.00 (பு.நே)



ராஜா யாழ்ப்பாணம்.

சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மற்றும் மும்தாஜ் நடித்த




(சி-2725)

நாளை முதல்

வசூல் ராஜா MBBS

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, (பு.நே)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## ஞாயிறு காலையில் ரியூசன் நடத்த தடை!

அமைச்சர் விஜிதஹேரத் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஞாயிறுக் கிழமை காலை நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களில் செயற்பாடு களைக் கட்டுப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. கலாசார விடயங்களுக்காக மாணவர்கள் நேரத்தை ஒதுக்கவும், மாணவர்களின் ஓய்வுக்காகவுமே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## கரவெட்டி விபத்தில் யுவதி தலையில் காயம்

கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத் தில் யுவதி ஒருவர் தலையில் படுகாய மடைந்தார். நேற்றுக்காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம பவத்தில் கரவெட்டி - துன்னாலை யைச் சேர்ந்த எஸ்.ஜெகதீஸ்வரி (வயது 22) என்ற யுவதியே தலை யில் காயமடைந்தவராவார். (17)

### தெளிவற்ற....

ஆனால், விமல் வீரவன்ச தாம் இதனை எதிர்ப்பதாகத் தெரிவிக்கின் றார். அவ்வாறெனில், ஜே.வி.பி சார் பான நான்கு அமைச்சர்களுக்கு எதி ராக அந்தக் கட்சி நடவடிக்கை எடுக் குமா?

ஏனெனில், அமைச்சர்கள் ஆத ரவு வழங்கும் வேளை, விமல் வீர வன்ச எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார். இது அந்தக் கட்சி இந்த விடயத் தில் தெளிவற்ற நிலையில் உள்ள தையே எடுத்துக்காட்டுகின்றது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி அரசு எமது கட்சி யைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினருக்கு எதிராக அரசியற் பழிவாங் கல்களை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பாக சபாநாயகருக் கும், பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென வும் அவர் மேலும் தெரிவித்தார்.(01)

### அரசின்....

தயாரிக்கப்பட்டது.

திருமலையின் சம்பூர் மற்றும் துறைமுகத்தை அண்டிய பகுதிகளில விடுதலைப் புலிகள் பதுங்குகுழிகளை அமைத்து வருகின்றனர். அத்துடன், துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதி களில் புலிகள் பெருமளவில் ஊடுரு வியுள்ளனர். இது சமாதான முயற்சி யைப் பாதிக்கும் ஒரு, செயலாகும்.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் அதிகார பூர்வமான அறிக்கையொன்றை சமர்ப் பித்துள்ளேன்.

நாட்டில் நீண்டகாலமாக நிலவி வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்பட்டுவரும் முயற்சி களில் விடுதலைப்புலிகளின் இந்தத் திடீர் இராணுவ பல அதிகரிப்பானது பாதிப்பை ஏற்படுத்துமென நம்புகின் றேன்.

ஈ.பி.டி.பி கட்சியின் இரண்டு அங்கத்தவர்கள் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டமை போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

யுத்த நிறுத்தத்தைக் கடைப்பி டிப்பதில் இருதரப்பும் உறுதியாகச் செயற்படவேண்டும். விடுதலைப்புலி கள் ஒரு நிலைப்பாட்டிலும், அரசாங் கம் ஒரு நிலைப்பாட்டிலும் இருந் தால் சமாதானம் உருவாக முடி யாது.

கிழக்குப் பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் உயிர்க் கொலைகள் மனித உயிர் களைப் பெறுமதியற்றவைகளாக்கி விட்டன. இந்த விடயத்தில் புலிகள் கவனமெடுத்து இந்தக் கொலைக ளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தடைப்பட்டுப் போயுள்ள சமா தான முயற்சிகள் விரைவுபடுத்தப் பட வேண்டும்.

இதேசமயம், கடந்த இரண்டு வருடத்தில் சமுர்த்தி அமைச்சின் 650 மில்லியன் காணாமற் போயுள் ளதெனவும், இதற்கெதிராக சமுர்த்தி அதிகாரசபை மீது சட்ட நடவ டிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச சர் தெரிவித்தார்.

## வேவு விமானம் நோட்டம்!

வடமராட்சி கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் மேல் விமானப்படை வேவு விமானமொன்று தாழப்பறந்து நோட்டமிட்டது.

நேற்று முன்தினம் காலை தொடக்கம் மாலைவரை இந்த வேவு விமானம் நோட்டமிடும் நடவடிக் கையில் ஈடுபட்டதாகத் தெரியவரு கிறது.

# தமிழ்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் மட்டக்களப்பில் புலிகளுடன் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடு தலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கு மிடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலையிலுள்ள சோலையகம் விருந்தினர் விடுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை இந்தச் சந்திப்பு நடை பெற்றது.

இந்தச் சந்திப்பில் மட்டு - அம் பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப் பாளர் குயிலின்பன், தளபதி பிரபா, மற்றும் மார்ஷல் முதலான விடுத லைப் புலிகள் பிரதிநிதிகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜ சிங்கம், கனகசபை, அரியநேந்திரன், பத்மநாதன், ஜெயானந்தமூர்த்தி ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கிராம அபி விருத்தி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது, நாடாளுமன்ற உறுப் பினர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று மக்களின் பிரச்சினைகளை நேரடியாக அவதானித்து அபிவி ருத்திப் பணிகளை மேற்கொள்ளல், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செல வுத் திட்டத்தின் மூலம் மேற்கொள் ளக்கூடிய அபிவிருத்தித் திட்டங் களை மேற்கொள்ளல் முதலானவை பற்றி பேசப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

### சடலத்துடன்....

தொடர்பான அறிக்கைகள் வெளி யிடப்பட வேண்டுமெனவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரி டம் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பான மகஜர் ஒன் றையும் கையளித்துள்ளனர்

எனினும், இது தொடர்பாக கருத்து வெளியிட்ட திருமலை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் இது தொடர்பாக மேற் கொண்டுள்ள விசாரணை அறிக்கை யினை பகிரங்கமாக வெளியிடமுடி யாது என்றும் அறிக்கைகள் அரசிற்கே சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஈ.பி. டி.பியினருக்கு பொலிஸாரும் இரா ணுவத்தினரும் பாதுகாப்பு வழங்கி னர். (04,10)

### அடிநிலை....

முறை நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்ட நிதி தனித்தனியே செல விடப்படமாட்டாது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செல வுத் திட்டத்தில் இருந்து ஒவ் வொரு நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் என ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது ஒரே நோக்குடன் அபி விருத்தித் திட்டங்களுக்குப் பயன் படுத்தப்படும் எனவும் -

இந்த நிதியினைக் கையாள் வதற்காக நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கான தலைவராக சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்நிதி முற்று முழுதாக அடி நிலை மக்களது தேவைகள் மற் றும் அபிவிருத்திக்குப் பயன்படுத் தப்படும்.

மக்களது தேவைகள், அடி நிலை மக்கள் தொடர்பான அமைப் புக்கள் மூலம் இனங்காணப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்படவுள் ளது.

இவ்வகையில் விளையாட்டுத் துறை, முன்பள்ளி, பெண்கள் அபி விருத்தி மற்றும் சுகாதார வைத் திய சேவை, மற்றும் போக்கு வரத்து என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் கஜேந்திரன் தெரிவித்தார்.

### தோணி....

சேர்ந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. இந்தச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது -

நேற்று மாலை 6.30 மணியளவில் மூன்று படையினர் தோணியொன்றில் வவுணதீவு வாவியில் சென்றுகொண் டிருந்தனர். திடீரென இவர்கள் சென்ற படகு கவிழ்ந்ததில் படையினர் ஒரு வர் உயிரிழந்ததுடன், மற்றைய இரு வரும் நீந்திக் கரை சேர்ந்தனர்.

உயிரிழந்த சிப்பாயின் சடலம் நேற் றிரவு வரை மீட்கப்படவில்லை. சுழி யோடிகள் இந்தப் படைச்சிப்பாயின் சடலத்தை கண்டு பிடிக்கும் முயற்சி யில் ஈடுபட்டுள்ளனர்.

### கொலைக்....

தனது கடையிலிருந்து வீடு திரும்பு கையிலேயே யதீஸ் சாந்தரட்ணம், பிரபு சாந்தரட்ணம், முகுந்தன் குமார சிறிதரன், உதயதாஸ் பாலசுப்பிர மணியம் ஆகியோர் கிரிக்கெட் மட் டையால் தாக்கினர் என்றும் காய மடைந்த செல்லத்துரை பாலசிங்கம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் இறந்தார் எனவும் இறந்த வரது உறவினர்களால் குற்றஞ்சாட் டப்பட்டிருந்தது.

இவர்கள் மீதான குற்றம் நிரூபிக் கப்பட்டதைத் தொடர்ந்தே இவர் களுக்கு ஆயுட்கால சிறைத்தண் டனை வழங்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் தந்தையினது ஏற்பாட்டிலே இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

### திருமலைக்....

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியள வில் திருமலை மாவட்ட போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழு அலுவல கத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப் பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், தளபதி வசந்த், தளபதி குணம், தளபதி குஞ் சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராணுவத்தரப்பில் இடமாற்றம் பெற்றுச் செல்லும் திருமலை மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், திருகோண மலை மாவட்ட படைகளின் இராணு வத் தளபதி மேஜர் ஜெனரல் குலத் துங்க, ஆகியோரும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் திருமலை மாட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் யஸ்ரின் அஸ்லின் மற்றும் கேப் ஹைபேக் ஆகியோர் கலந்துகொண் டனர்.

இந்தச் சந்திப்பின் போது இடமாற றம் பெற்றுச் செல்லும் திருமலை மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் திருகோணமலை மாவட்ட படைகளின் புதிய கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் குலத்துங்கவினை விடுதலைப் புலி களின் தளபதிகளுக்கு அறிமுகம் செய்துவைத்தார். (04,10)

## பல்கலை மாணவனைத் தாக்கிய மாணவன் ஒருவர் இடைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவரொருவர் தாக்கப்பட்டமை தொடர்பாக கலைப்பீட இறுதிவருட மாணவரொருவர் பல்கலைக்கழகத் திலிருந்து இடைநிறுத்தப்பட்டுள் ளார்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த கே. கோகுலன் என்ற இறுதிவருட மாணவனே இடைநிறுத்தப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை பகல் கலைப்பீட இரண்டாம் வருட மாண வரொருவரை இறுதிவருட மாண வர்கள் தாக்கியிருந்தனர்.

இதனால் அன்றையதினம் பல் கலைக்கழக வளாகத்தில் குழப்ப நிலை காணப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தலையிட்டதன் மூலம் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட் டிருந்தது.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பல்கலைக்கழக நிர்வா கத்தினர் நேற்று மேற்குறிப்பிட்ட மாணவனுக்கு தற்காலிகமாக கல் வியைத்தொடர தடை விதித்துள் ளார்கள் எனத் தெரிவிக்கப்படு கிறது.

## வெடிபொருள் அகற்றியதாக உறுதிப்படுத்தப்பட்ட பகுதியில் வெடிக்காத நிலையில் ஷெல்!

(அரியாலை)

வெடிபொருள் அகற்றப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட பகுதியில் கிடங்கு வெட்டியபோது வெடிக்காத நிலையிலிருந்த ஷெல் காணப்பட்ட தால் அரியாலைப் பகுதியில் மேற் கொள்ளப்படவிருந்த சிறிய நீர் விநி யோகத் திட்டம் இடைநிறுத்தப்பட் டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்திற்கருகில் இடம் பெற்றது.

இது குறித்துத் தெரியவருவதா வது-

சிறிய நீர்விநியோகத் திட்டத் தின் கீழ் அரியாலைப் பகுதியிலுள்ள ஐநூறு குடும்பங்களுக்கு குடிநீர் வச தியை உருவாக்கிக் கொடுக்கும் பொருட்டு 35 இலட்சம் ரூபா செல வில கட்டட மற்றும் நீர்விநியோகப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக் கப்பட்டன.

இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பகுதி முன்னர் 'ஹலோரஸ்ட்' வெடிபொருள் அகற்றும் பிரிவினரால் வெடிபொருள் அகற்றப்பட்டு, வெடி பொருள் அகற்றிய பகுதி என உறு திபபடுத்தப்பட்ட பகுதியாகும்.

எனினும், நீர் விநியோகத்திற் கான குழாய் பொருத்தும் கான் வெட்டப்பட்டபோது வெடிக்காத நிலை யில் ஷெல் ஒன்று காணப்பட்டது.

தெய்வாதீனமாக அந்தச் ஷெல் மீது குழி தோண்டப் பயன்படும் ஆயுதம் படவில்லை.

இதேவேளை - எவருக்கும் எது வித ஆபத்தும் இடம்பெறாத போதி லும், அச்சமுற்ற பணியாளர்கள் அப் பகுதியில் தமது பணியைக் கைவிட்ட துடன் வெடி பொருள் அகற்றும் பிரிவினருக்கும் அது குறித்துத் தெரியப்படுத்தியுள்ளனர்.

### கட்சித்...

சார்பாக கலந்துகொண்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கோரிக்கை விடுத்தார்.

இந்த விவாதம் தொடர்பாக ஐக் கிய தேசியக்கட்சி இணக்கம் தெரி விக்கின்ற போதிலும், இதற்கு முன் னதாக கட்சிகள் மத்தியில் அரசாங் கம் கலந்துரையாடலொன்றை நடத்த வேண்டுமென கரு ஜெயசூரிய மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா இருவரும தெரிவித்தனர்.

ஆனால், கட்சிகள் மத்தியிலான கலந்துரையாடல் சாத்தியமில்லை யென அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்த நிலையில் இரு தரப்பினருக்குமிடையில் கடும் வாய்த் தர்க்கம் இடம்பெற்றது.

இதனையடுத்து கரு ஜெயசூரிய மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா இருவரும் கட்சித் தலைவர்கள் கூட் டத்திலிருந்து வெளியேறினர். (01)

## பல்கலைக்கழக விண்ணப்பப் படிவம் விநியோகம்

2004/ 2005 கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் நாளைமுதல் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் யாழ். முகவரான பூபாலசிங்கம் புத்தகசாலையில் விநியோகிக்கப்படவுள்ளது.

### பின்தங்கிய...

மாணவர்களது எண்ணிக்கை குறை வாக உள்ளதாகவும் ஆர்ப்பாட்டத் தில் கலந்துகொண்டோர் தெரிவித் தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தை பின் தங்கிய மாவட்டமாகக் கணிப்பதற் கான நடவடிக்கைகளை தாம் மேற் கொள்வதாக ஏற்கனவே நாடாளு மன்ற உறுப்பினர்கள் உறுதிய ளித்தபோதும், அதனை நடைமுறைப் படுத்தவில்லையென ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத் துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப் பினர்களுடனும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வாக்குவாதத்தில் ஈடு பட்டனர். எனினும், இவர்களது கோரிக்கையை நாடாளுமன்றத்துக்கு எடுத்துச் செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர்.

## நாணய மாற்றுவீதம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்களுக்கான கொள்வனவு மற்றும் விற்பனவு விலைகள்.

| நாணயம் | கொ.விலை (ரு.ச) | வி.விலை (ரு.ச) |
|---|---|---|
| அமெரிக்கடொலர் | 103.38 | 104.37 |
| யூரோ | 126.08 | 128.08 |
| ஸ்ரெலிங்பவுன் | 189.00 | 191.55 |
| சுவிஸ் பிராங் | 81.77 | 83.16 |

நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசு ரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.